ராவணன் வீழ்ச்சி

கொஞ்சமோ தியாகப் பசி!

பி. ஸ்ரீ

கொஞ்சமோ தியாகப் பசி!

31

மூலபலத்தைக் கண்டதுமே ஓட்டம் பிடித்த வானரப் படைகள் அங்கதனுல் தேற்றப்பட்டு மீண்டதும், இப்படைகளை ராவணன் தன் சேனையுடன் எதிர்ப்படுகிருன். அப்போது லட்சுமணன் தலைமை பூண்டு போரை நடத்துகிருன்.

லட்சுமணனது நிகரற்ற வலிமை கண்டு ராவணன் மோகனுஸ்திரத்தைப் பிரயோகித்து லட்சுமணனை மயக்கி விடப் பார்க்கிருன். இந்த அஸ்திரத்தை விபீஷணன் சொன்ன ஆலோசனைப்படி ஒழித்து விடுகிருன் லட்சுமணன்.

புலியா, பசுவா, நரியா?

ராவண கோபம் முழுதும் இப்போது விபீஷணன்மீது திரும்பி விடுகிறது. இந்திரஜித்தை வென்றெழிப்பதற்கு விபீஷணனின் புத்திதானே பயன்பட்டது? 'அப்படியே இன்னும் முட்டுக்கட்டை போட்ட வண்ணமா யிருக்கிருனே இந்தத் துரோகி! பார்த்தால் பசு; கொடுமைப் பாய்ச்சலில் புலி; தந்திரத்தில் குள்ளநரி! இவனை ஒழித்துத்தான் மறு ஜோலி' என்பது ராவணன் மனநிலை.

உடனே ஒரு வேலாயுதத்தை எடுக்கிருன். மண்டோதரியுடன் சீதனமாக அவள் தந்தை மயன் கொடுத்தது. விட்டபோது ஒருவனை—அவன் புலியா யிருந்தாலும், பசுவா யிருந்தாலும், நான்முகக் கடவுளாகவே யிருந்தாலும் —கொன்றெழித்து விடும் என்பதை ராவணன் அறிவான்; விபீஷணனும் அறிவான்.

சாகத் துணிந்து விட்டான் விபீஷணன். சாவைப் பற்றிய அச்சம் சத்தியாக்கிரகிக்குச் சிறிதும் இல்லையே. ஆனுல் அடைக்கலம் புகுந்த விபீஷணைப் பசு வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்பது லட்சுமணன் துணிவு.

தியாகப் போட்டி

ராவணன் விடுத்த அஸ்திர சஸ்திரங்கள் பயன்படவில்லை யென்பது தெரிந்ததும், லட்சுமணன் அந்த வேலைத் தன் மார்பில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிரே வருகிருன்:

'ஏற்பன் என் தனி
மார்பின்' என்(று) இலக்குவன்
எதிர்ந்தான்.

[ஏற்பன்—ஏற்பேன். தனி மார்பில்—தனித்த மார்பில்: தியாகத்திற்கு உதவுதலாலும் 'தனி மார்பு' தானே.]

ஆனுல் இந்தத் தனி மார்புக்கு அந்தத் தியாகத்தை விட்டுக் கொடுக்க விபீஷணன் எப்படி உடன் படுவான்?

இலக்கு வற்குமுன்
வீடணன் புகும்.

[இலக்குவற்கு—லட்சுமணனுக்கு. புகும்—புகுபவன் ஆனுன்.]

இவ்விருவரையும் விலக்கிக் கொண்டு ஒரு வானர வீரன் ஓடி வருகிருனே, அவன் யார்? அனுமன் தானு? அனுமனும் தியாகப் போட்டியில் கலந்து கொள்ள ஓடி வருகிருன்.

ஆனுல் அனுமனுக்கும் முன்னே அங்கதன் ஒடி வந்து, லட்சுமணனையும் விபீஷணனையும் விலக்கிக்கொண்டு, வேலுக்கு எதிரே வந்து நிற்கிருன்.

கடைசியாக வந்து கொண்டிருந்த அனுமன் இப்போது அங்கதனுக்கும் முன்வந்து தோன்றுகிருன்; அப்படி விரைந்து முந்துகிருன். இப்போது இந்தப் போட்டி வீரர்களைச் சற்று அமைதியாக நோக்குவோம்:

இலக்கு வற்குமுன்
வீடணன் புகும்; இரு-
வரையும்

விலக்கி அங்கதன்
மேற்செலும் ; அவனையும்
விலக்கிக்
கலக்கும் வானரக்
காவலன் ; அனுமன்முன்
கடுகும் ;
அலக்கண் அன்னதை
இன்னதென் றுரைசெய
லாமோ ?

[மேற் செலும் — மேலே செல்பவனானான். கலக்கும் — சேர்பவனானான். வானரக் காவலன் — வானர மகாராஜா வான சுக்கிரீவன். முன் கடுகும் — விரைந்து முந்துவானானான். அலக்கண் அன்னதை — அந்தத் துன்ப நிலையை.]

அங்கதனுக்கும் அனுமனுக்கும் இடையே சுக்கிரீவன் எவ்வளவு கஷ்டப்படுகிறான், தன் மார்பையே வேல் பாயும் தனி மார்பாகச் செய்து கொள்வதற்கு !

ததியோதனம், புளியோதனம் முதலிய உண்டி வகைகளை எதிர்ப்படும் பசியர்கள் போல் இந்தத் தியாகிகள் உயிர்த் தியாகத்திற்குப் போட்டி போட்டு முந்துகிறார்கள். அந்தத் 'துன்பநிலை' (அலக்கண்) தியாகிகளுடையதன்று, கவிஞன் நிலையும் நமது நிலையும் தான் !

லட்சுமணன் தியாகம்

இந்தத் தியாக வீரர்கள் லட்சுமணனைக் கடைசியாக விட்டுவிட்டார்களோ என்றல்லவா நினைக்கிறீர்கள் ? ஆனால் வேல் பாய்வது லட்சுமணன் மார்பில் தானே — லட்சுமணன் விரும்பியபடி அந்தத் தனித்திரு மார்பிலே தான் !


ஏன் ? எப்படி ? லட்சுமணனுடைய பொன் மார்பை ஊடுருவிச் சென்று விடுகிறது வேல். லட்சுமணன் விழுந்து விடுகிறான், பாருங்கள் :

முன்நின் றாரெலாம்
பின்னுறக் காலினின்
முடுகி,

'நின்மின்; யான் இது
விலக்குவன்' என்(று)உரை
நேரா,



மின்னும் வேலினை,
வண்ணவர் கண்புடைத்(து)
இரங்க,
பொன்னின் மார்பிடை
ஏற்றனன் முதுகிடைப்
போக !



[பின்னுற—பின்னே பொருந்தும்படி. காலினும் முடுகி—கரத்தினும் விரைந்து போய். நின்மின்— நீங்கள் நில்லுங்கள். உரை நேரா — உரைத்து. விண்ணவர் — தேவர்கள். கண்புடைத்து இரங்க—கண்ணில் மோதிக்கொண்டு அழ. மார்பிடை — மார்பிலே. முதுகிடை — முதுகின் இடத்து.]

முட்டும் பசுவை விட்டுப் போகிறான் !

லட்சுமணன் விழுந்ததும் ' காரியம் முடிந்தது ' என்று ராவணன் இலங்கையூரை நோக்குகிறான். ' ஓடிப் போவது எங்கடா ?' என்று முட்டவந்த விபீஷணப் பசுவைச் சிறிதும் லட்சியம் செய்யவில்லை.

பொல்லாத எதிரியை வீழ்த்தி விட்ட பின் அந்த வீட்டிலிருந்து பசு ஒன்று முட்டவந்தால் அதை லட்சியம் செய்வதுண்டா ? அப்படியே,

' வென்றி என்வயம்
ஆனது ; விடணப்
பசுவைக்
கொன்(று)இ னிப்பயன்
இல்லை !' என்(று) இராவணன்
கொண்டான்.

[வென்றி — வெற்றி: வயம் — வசம்: கொண்டான் — மனத்தில் கொண்டான்.]

' புலியைத் தீர்த்து விட்டோம்; இனி இந்தப் பசு திரிந்தால் என்ன? தீர்த்தால் என்ன?' என்று ராவணன் இலங்கையூருக்குப் போய் விடுகிறான்.

சோகமும் மகிழ்ச்சியும்

விபீஷணனே 'லட்சுமணன் இறந்தான் ; இனி நான் இருந்து என்ன பயன் ?' என்று தற்கொலை புரிந்து கொள்ள முயல்கிறான்.

இந்த முயற்சியை ஜாம்பவான் தடுத்து, ' அனுமன் இருக்கும்போது நமக்கு 'என்ன குறை ? மறுபடியும் மருந்து கொணர்ந்து பிழைப்பிப்பான் ' என்று தேற்றுகிறான். அனுமனும் ஜாம்பவான் சொற்படியே செய்ய, லட்சுமணன் எழுந்து நின்று அனுமனைத் தழுவிக் கொள்கிறான்.

மூர்ச்சை தெளிந்ததும் லட்சுமணனுடைய முதலாவது கேள்வி ' விபீஷணன் க்ஷேமமா யிருக்கிறானா ?' என்பதுதான்.

' விபீஷணன் இறவாமல் இருக்கிறான் ' என்று தெரிந்து கொண்டதும், அந்தத் தம்பியை நோக்கி உவகைக் கண்ணீர் சிந்தி, ' இனி ராவணன் இறந்தான் ! என் கொழுந்தி சிறை மீண்டாள் !' என்கிறான் லட்சுமணன்.

எல்லாரும் ராமனை நோக்கிப் போகிறார்கள். ஜாம்பவான் நிகழ்ந்தவற்றையெல்லாம் சொல்லுகிறான். ராமன் அனுமனைக் கொண்டாடி வாழ்த்துகிறான்.

கடைசியாக, விபீஷணனுக்காகத் தம்பி உயிர்துறக்கத் துணிந்த சாகசத்தைப் பாராட்டுகிறான், சிபிச் சக்கரவர்த்தியின் தியாக நினைவுடன்.

விருந்தும் துக்கமும்

இலங்கைக்குள்ளே சென்ற ராவணனே லட்சுமணனைக் கொன்று விட்டோம் என்று மகிழ்ந்து போரில் உதவியவர்களுக்கு விருந்தளிக்கிறான்.

இதற்குள் மூலபலம் முடிந்தது கண்ட தூதர்கள் செய்தி சொல்ல, ராவணன் அந்தப் பேச்சில் சந்தேகம் கொண்டு கோபுரத்தின்மீது ஏறி அந்தப் படுகளத்தைப் பார்வை யிடுகிறான்.

பிறகு கோபுரத்திலிருந்து இறங்கி வந்து, எஞ்சிய சேனைகளைத் திரட்டி வருமாறு மகோதரனுக்குக் கட்டளை யிடுகிறான்.

அப்பால் தான் போருக்குப் புறப்படுவதற்கு முன் சிவபூஜை செய்கிறன்; வைதிக முறையில் தானங்களை வாரி வழங்குகிறன்.

ராவண பக்தி

சிவ பூஜையை முறையாக — அதாவது வைதிக முறையில் — ராவணன் செய்ததாகவும், அந்தப் பூஜையை இம்மை மறுமை என்ற இருமைக்கும் ஏற்ற முறையில் செய்ததாகவும் கவிஞன் கூறுகிறன்:

ஈசனை, இமையா
முக்கண் இறைவனை,
இருமைக்(கு) ஏற்ற
பூசனை முறையிற்
செய்து, திருமறை
புகன்ற தானம்
வீசினன்......... ....

ராவணன் சிவபெருமானை இஷ்ட தெய்வமாகப் பூஜித்தான் என்பது கவிக்கூற்று. சிவ பக்தியால் வரப்பிரசாதங்களும் பெற்றிருந்தான்.

எனினும், சிவ பெருமானையும் போரில் ஜயித்து விட்டதாகவே எண்ணம். இந்த இஷ்டமூர்த்தியின் சன்னிதியிலும் தன்னைச் சிறிதும் தாழ்த்திக் கொள்வதில்லையாம்.

'வடக்கே பரமேச்வரன்; தெற்கே ராவணேச்வரன்' என்ற நிலையில் கர்வமும் கௌரவமும் கொண்டிருந்தவன் பரமேச்வரனுக்குத் தான் ஓர் அங்குலம் கூடக் குறைந்தவன் இல்லை என்று தான் எண்ணி யிருந்தானும்.

ஈசற்(கு) ஆயினும்
ஈடழி வுற(று)இறை
வாசிப் பாடழி —
யாத மனத்தினன்

[இறை — கொஞ்சமும்.]
என்பதும் கவிக்கூற்று.

அத்தகைய ராவணன் திருந்தி விட்டான?

கண்சுமந்த நெற்றிக்
கடவுள்

என்று முழு முதற் கடவுளாகச் சித்தாந்திகள் வழிபடும் முறையில் 'இமையா முக்கண் இறைவ'னுக்கு 'இருமைக்கு ஏற்ற பூசனை' புரிகின்றன!

உண்மையான சிவபக்தியால் உளம் அறவழிப்பட்டிருக்க வேண்டுமே; சீதையை விட்டிருக்க வேண்டுமே! தியாகப் பசி ஏற்பட்டிருக்க வேண்டுமே!

தேரேறிச் செய்யும் சபதத்தைத்தான் கேளுங்கள்; 'ஜானகி மலர்க் கைகளால் வயிற்றில் அடித்துக்கொண்டு துன்பக் கடலில் மூழ்கிப் போக வேண்டும்; இது நிகழவில்லை யென்றல், மண்டோதரி இந்த நிலையை அடைய வேண்டும்; இரண்டில் ஒன்றை இன்றே ஆக்குவேன்!'

* * *

கோட்டை ஆங்கிலேயர் பீரங்கியால் துளைபடாமலிருக்க, அந்தப் பீரங்கி வாயை மந்திரத்தால் அடைத்துவிடலாமா என்று முயற்சி செய்தானும் ஓர் அரசன். அதுதான இதுவும்?

தலைப்பைக் கண்டதும், நம் மனக் கண் சாதாரணமாக ராமன் திருமுகத்தையே காண்கிறது. கைகேயி முன் ராஜசிம்மம் போல் ராமன் போய் நிற்பதைக் காண்கிறோம்.

அந்த அம்மாள் 'தெம்மடங்கிய சேண் நிலம்' (பகை ஒடுங்கிய விஸ்தாரமான மகாராஜ்யம்) என்று தொடங்குவது காதில் விழுகிறது. 'இந்த மகா

ராவணன் வீழ்ச்சி

மும்மடங்கு பொலிந்த முகம்

பி.ஸ்ரீ

32

ராஜ்யத்தை ராமனுக்கு இவளே கொடுத்து விடுவாளோ?' என்று கூட எண்ணத் தோன்றுகிறது, கைகேயியின் பழைய செம்மையுள்ளத்தை நினைத்துப் பார்த்ததும்.

'இவ்வளவு பெரிய, வசதி நிறைந்த, மகாராஜ்யம் உன் தம்பியுடையது' என்றுதான் கைகேயி சொல்லி முடிக்கிறாள். எனினும்,

மும்மடங்கு பொலிந்த
முகத்தினன்

என்பது ராமன் நிலை.

அசோக வனத்தில் சிறையிருப்பவள் மனக்கண்ணால் கண்டு வெதும்பும் காட்சி இது. நாமோ மனக் கண்ணால் கண்டு பரவசமாகுமாறு அமைந்திருக்கிறது கவிதை.

ஆனால் — என்ன ஆச்சரியம்! — ராவண முகமும் இப்படி மும்மடங்கு பொலியக் காண்கிறோம் ஒரு சமயம். எப்போது? எப்படி?

'ஈசனை, இமையா முக்கண் இறைவனை, இருமைக்கு ஏற்ற பூசனை (பூஜை) முறையிற் செய்த' ராவணேச்வரன் ஆங்கால மெல்லாம் அநியாயம் செய்து சாங் காலத்தில் சங்கரா! சங்கரா!' என்ற பேர் வழியைத்தான் நினைவூட்டுகிறானா?

தோண்டக் கோலம் விரைவில் போர்க்கோலமாகிறது. நீறு பூசிய நெற்றியை வீர பட்டம் ஏறி மறைத்து விடுகிறது. சிவகவசத்தை நம்பியிராமல் மார்பிலே பொற் கவசம் அணிந்து கொள்கிறான்.

அம்பறாத் தூணி பூட்டி மணிகள் கட்டிய பெரிய தேரில் ஏறித் தோள்தட்டி ஆரவாரித்து வில் நாணியைத் தெறித்த வண்ணம் போர்க்களத்தில் தோன்றுகிறான்.

ராவணன் சேனையோடு இறுதிப் போருக்கு வந்திருப்பது தெரிந்து ராமனும் போர்க்கோலம் பூண்டு, தேவேந்திரன் அனுப்பிய தேரில் வருகிறான். தேவசாரதியான மாதலி தேரை ஓட்டி வருகிறான்.

ராமனோடு ராவணன் போர் நிகழ்த்துவதற்கு முன்பே மகோதரன் லட்சுமணனை நெருங்க முயன்று ராமன் தேரையே எதிர்ப்பட்டு அம்பு மழை பொழிந்து ஆரவாரம் செய்து அழிந்து போகிறான். மகோதர வாழ்வு என்ற மாயா நாடகம் எவ்வளவு வேகமாக முடிந்து போகிறது — விளக்கை எதிர்ப்பட்ட விட்டிற் பூச்சி போல!

மகோதரன் இறந்தது கண்ட ராவணன் தன் தேரை ராமன் மீது விரைவில் செலுத்துமாறு தன் சாரதிக்குக் கட்டளையிடுகிறான். வானர வீரர்கள் இருபாலும் ஒதுங்குகிறார்கள்.

இருவர் வில்லொலிகளால் அனுமன் முதலானவர்களும் செயலற்று விழுந்து விடுகிறார்கள். ராவணன் சரமாரி பொழிய வானர சேனை சிதறிப் போகிறது.

இருவர் தேரும் விரைவாகச் சாரிகை திரிகின்றன. ராவண பாணங்களை ராம

பாணங்கள் அறுத்தொழிக்க, ராமனது தேர்க் கொடியை ராவணன் அறுத்துக் கடலில் விழ்த்தி விட்டுத் தன் அம்புகளால் ராமனை மூடி மறைத்து விடுகிறான். தேவர்களும் கலங்கி மயங்கிப் போகிறார்கள்.


ராவணன் மாயாஸ்திரம் வீச, முன் இறந்த அரக்கர்கள் உயிர் பெற்றெழுந்து வந்து எங்கும் நெருங்கியது போல் ஒரு



தோற்றம் உண்டாகிறது. இந்த மாயாஸ்திரத்தை ராமனது ஞானஸ்திரம் அழித்து விடுகிறதாம்.

ராமனைப் பரம்பொருள் என்று விபீஷணன் குறிப்பிட்டதை மூட பக்தியின் சிகரம் என்றே கருதியவன் ராவணன். இப்போது அந்த நினைவு வர, அதை அவ்வளவு லேசாக ராவணன் மனோபாவம் தள்ளி விடவில்லையாம்;

'சிவனோ அல்லன்;
நான் முகன் அல்லன்;
திருமாலாம்
அவனோ அல்லன்;—
மெய்வரம் எல்லாம்
அடுகின்றான்—
தவனோ என்னில்,
செய்து முடிக்கும்
தரன் அல்லன்;



இவனோ தான் அவ்
வேத முதற்கா-
ரணன்?' என்றான்.

[நான்முகன்—பிரமன், மெய்வரம்—உண்மையாகவே நான் பெற்றிருந்த வரங்

கள். அடுகின்றான் — பயன் படாமற் செய்துவிடுகிற இந்த ராமன். தவன்— தவமுடைய முனிவன்.]

இப்படி மனோபாவம் பகுத்தறிவுக் கட்டை அவிழ்த்துக்கொண்டு ஓட முயன்றாலும், அந்த வேதாளம் முருக்க மரத்தில் ஏறிக்கொள்ளாதபடி ராவணு காரமான அகங்காரம், அதைத் தடுத்துப் பிடித்துக்கொண்டே, 'எதிர்ப்பவன் எவனாக இருந்தால்தான் என்ன? நான் போரைத் தொடர்ந்து நடத்தி வருவேன்; பின் வாங்கேன்; வெற்றியை முடிப்பேன்' என்றெல்லாம் தன் னம்பிக்கை—மந்திரங்களை ஜபித்துக் கொண்டு, மேலும் சினத்துடன் அஸ்திரங்களைப் பிரயோகிக்கத் தொடங்குகிறது.

இந்த அஸ்திரங்களையெல்லாம் விழ்த்தி, ராம சரங்கள் ராவணன் மார்பிலும் பிரவேசிக்கின்றன; ராம பாணங்கள் தலையை அறுத்துத் தள்ளியும், அந்தத் தலை மீண்டும் முளைத்து ராமனை வைது ஆரவாரிக்கின்றனவாம்.

எனினும் ராம பாணங்கள் தங்களுக்கு ஒரு கூடு போலச் செய்து விடுகின்றன ராவணனுடம்பை. இந்த நிலையில் ராவணன் தளர்ந்து தேரில் விழுந்து மூர்ச்சித்துக் கிடக்கிறான். 'இப்போது கொல்வது அறம் அன்று, நீதியன்று' என்று தீர்மானிக்கிறான் ராமன்.

ராவண சாரதி தேரை விலக்கி நிறுத்துகிறான். ராவணனோ உணர்வு பெற்றெழுந்ததும் சாரதி மேல் கடுஞ்சினங் கொள்கிறான். சாரதி தான் தேரைத் திருப்பிச் செலுத்தியதற்குக் காரணத்தைத் தெரிவித்ததும் ராவணன் அவன் மீது இரக்கம் கொண்டு மன்னித்து 'வெற்றி பொருந்திய நமது தேரை மறுபடியும் செலுத்துவாய்' என்று கட்டளையிடுகிறான்.

ராமன் ராவணனது வில்லை அழிக்க, அவன் வேறு வேறு வில்லை எடுத்துப் போரைத் தொடர்ந்து நடத்துகிறான். கடைசியாக ராமன் பிரமாஸ்திரத்தைச் செலுத்துகிறான்.

எத்தனை காலட்சேப மேடைகளில் எவ்வளவு அதிர்ச்சியை இந்தப் பாட்டு உண்டாக்கியிருக்கிறது:

முக்கோடி வாணாளும்,
முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வன் முன்னாள்

'எக்கோடி யாராலும்
வெலப்படாய்! எனக்கொடுத்த
வரமும், ஏனைத்

திக்கோடும் உலகனைத்தும்
செருக்கடந்த புயவலியும்
தின்று, மார்பில்

புக்(கு)ஓடி உயிர்பருகிப்
புறம்போயிற்(று) இராகவன்தன்
புனித வாளி.

[முதல்வன் — (இங்கே) மூவர் என்ற முதல்வருள் ஒருவனான பிரமன். எக்கோடி யாராலும் — எந்த வரிசையில் சேர்ந்த எவராலும். ஏனை — மற்றும். செருக் கடந்த — போரால் வென்ற]

திக்குவிஜய காலத்திலே எத்தகைய வெற்றிப் பெருமிதம் முகத்தில் காணப்பட்டதோ, அத்தகைய பெருமிதம் மும்மடங்கு பொலிகின்றதாம் இப்போது உயிர் துறந்து கிடக்கும் இந்த முகங்களிலே:

வெம்மடங்கல் வெகுண்டனைய
சினம்அடங்க, மனம்அடங்க,
வினையம் வீயத்,

தெம்மடங்கப் பொருநடக்கைச்
செயல்அடங்க, மயல் அடங்க,
ஆற்றல் தேய,

தம்அடங்கு முனிவரையும்
தலைஅடங்க நிலைஅடங்கச்,
சாய்த்த நாளின்

மும்மடங்கு பொலிந்தனஅம்
முறைதுறந்தான் உயிர்துறந்த
முகங்கள் அம்மா!

[வெம் மடங்கல் — கொடிய சிங்கம். வெகுண்டனைய - கோபித்தாற்போன்ற. வினையம் — வஞ்சனை. விய — ஒழிய. தெம்மடங்க — பகைவர் ஒடுங்கும்படி. பொரு நடக்கைச் செயல், போர் செய்த பெரிய கைகளின் செயல். மயல்— காமவெறி. தம் அடங்கு — தமக்குள்ளே அடங்கியிருக்கும். நாளின் — நாளைக் காட்டிலும்.]

* * *

ராமனது அந்தத் தியாக வீரத்தைக் குறிப்பிடும் போதும் 'மும்மடங்கு பொலிந்த முகத்தினன்' என்று தானே வருணித்திருக்கிறான் கவிஞன்?

நாடு துறந்த சமயத்திலே ராமன் 'மும் மடங்கு பொலிந்த முகத்தினன்' என்றால், உயிர் துறந்த சமயத்திலும்;

முப்மடங்கு பொலிந்தன அம்
முறைதுறந்தான் உயிர்
துறந்த
முகங்கள் அம்மா!

என்ற நிலையில் ராவணன் காணப் பட்டானும்.

வீரமும் காதலும்

ராமனது வீரப் பொலிவு காவிய நாயகியின் கூற்றாக வருணிக்கப் பட்டது. ராவணனது வீப் பொலிவோ கவிக்கூற்று. ஆனால் 'முறை துறந்தான்' முகப் பொலிவு தானே!

இப்படி விழுந்து கிடக்கும் ராவணனை ராமன் பார்த்தான் என்பதைக் கூறும் கவிக் கூற்றும் ஊர்ந்து கவனிக்கத் தக்கது:

காதலித்த உருவாகி
அறம்வளர்க்கும் கண்ணாளன்
தெரியக் கண்டான்.

ராவண வீரம் முறை துறந்த வீரம், ராமவீரம் அறம் வளர்க்கும் வீரம் என்பது கருத்து. அறம் வளர்க்கும் வீர ராமனைக் 'கண்ணாளன்' என்று குறிப்பிடுவதும் உற்று நோக்கத் தக்கது.

கண்ணாளன் கண்ணாட்டியைப் பேணும் காதலுடன் ராமன் அறத்தைப் பேணிப் பாதுகாத்து வந்தான் என்பது குறிப்பு.

'நான் என் மனைவியைக் காதலிப்பது போல் இந்து மதத்தைக் காதலிக்கிறேன்' என்ற மகாத்மா காந்தியின் வாக்கை நினைவூட்டிக் கொண்டால், ராமனுக்கு அறத்தின் மீதுள்ள காதலும் ஒருவாறு புலனாகி விடும்.

யார் யார் எந்த எந்த அழகைக் காதலிப்பாரோ, அந்த அந்த அழகுக ளெல்லாம் ராமனுடைய திரு மேனியில் அதிசயமாகக் காணப்படுகின்றனவாம்.

ஆனந்தமான காலைப் பொழுதையோ, மோகனமான மாலைப் பொழுதையோ பார்க்கும் போது, எத்தனை புதுமைகள், வியப்புக்கள், அழகுகள், ஆனந்தக் கனவுகள் கணந்தோறும் பிறந்தவண்ணமா யிருக்கின்றன? ராமன் என்ற அழகன் மேனியிலும் காதலித்த அழகுகள், வண்ணங்கள், புதுப்புதுப் பொலிவுகள் பிறந்தவண்ணமா யிருக்கின்றனவாம்.

இவ்வளவு அழகையும் அறம் வளர்ப்பதிலேயே பயன் படுத்திக் கொள்கிறான் ராமன் என்பது குறிப்பு.

'உண்மையே அழகு! அழகே உண்மை' என்பது கவிஞர் காணும் உண்மை. ராமன் அழகிலோ, காதலே



33

அறம், அறமே காதல் என்பது கம்பனின் காணும் உண்மை.

இந்தக் காதல், அறப்பித்தனாகிய விபீஷணனை வசிகரித்தது பொருத்தமே; 'இனம் இனத்தோடே' என்பதற்கு உட் பொருளாகி உண்மைப் பொருள் காணும் போது, விபீஷணன் தன் இனத்தை ராவணனது ராட்சஸ இனத்தில் கண்டு கொள்ளாமல் ராமனது சூரிய குலத்தில் கண்டு கொண்டது பொருத்தமே என்பது புலனாகும்.

இரத்த பாசம்

எனினும் பாசம் விபீஷணப் பசுவையும் விட்டுவிடவில்லை. ராவணனுக்குச் சமக் கடன் செய்யக் கருதிய விபீஷணனும்,

அண்ணா ஓ! அண்ணா ஓ!

என்று கதறுகிறான்;

விபீஷணன் புலம்பலுக்கிடையே சூர்ப்பனகையைப் பற்றிய ஒரு குறிப்பும் காணப்படுகிறது:

கொல்லாத மைத்துனனைக்
கொன்றாய் என்(று) அதுகுறித்துக்
கொடுமை சூழ்ந்து
பல்லாலே இதழ்அதுக்கும்
கொடும்பாவி நெடுப்பாரில்
பழிதீர்ந் தாளோ?

[கொல்லாத—(இங்கே) கொல்வதற்கு அரிய. கொடுமை சூழ்ந்து — கொடுமை புரியச் சூழ்ச்சி செய்து. நெடும் பாரில்— நெடிய பூமியில்.]

சூர்ப்பணகையின் கணவன் ராவணனுடைய மைத்துனன். அவனை ராவணன் திக்கு விஜய காலத்தில் கொன்று விட்டான். 'அந்தக் கொலைக்காகப் பழி வாங்கவேண்டுமென்று சூழ்ச்சி செய்து ராவணனை இப்படிக் கொல்வித்தாளோ?' என்பது விபீஷணன் சந்தேகம் இப்போது.

காமநெருப்பில் தன் மூக்கையும் அர்ப்பணம் செய்தவள் எதைத் தியாகம் செய்தும் யாரைத் தியாகம் செய்தும் தன நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினாள் என்பது வெளிப்படை. ராவணாதி ராட்சஸர்களை ராமன் அழிக்க விரும்புகிறான் என்று தெரிந்துகொண்டதும், அதற்கும் தான் உதவி புரியச் சித்தமாயிருப்பதாக ராமனிடத்திலேயே தெரிவித்திருக்கிறாள்.

ராவணனுடைய அழிவில் சூர்ப்பணகைக்கு வருத்தம் கிடையாது. பழிக்குப் பழி வாங்கிவிட்ட ஒருவகைத் திருப்தியும் இருக்கக் கூடியதுதான். விபீஷணன் சூர்ப்பணகையை உள்ளபடி அறிந்திருக்கக் கூடியவன் தானே?

சகோதர பாசத்தால் அனாவசியமான சந்தேகம் சகோதரி மீது ஏற்பட்டதென்று கருதினால், எத்தகைய சகோதர பாசத்தைத் தர்ம பாசம் வென்றிருக்க வேண்டும்! எப்படியும், விபீஷணன் சூர்ப்பணகை என்ற இரு குணசித்திரங்களுக்கு ஒரு திறவுகோல் இங்கே கிடைக்கிறது.

மண்டோதரியின் மாட்சி

ராவணன் இறந்த செய்தியை அறிந்து கொண்டதும் மண்டோதரி பல மாதர்களுடன் அந்த இடத்திற்கு



வருகிறன்: மண்டோதரியின் பிரலாபக் கவிகளில் மிகவும் பிரசித்தமானது வருமாறு :

வெள்ளெருக்கஞ் சடைமுடியான்
வெற்(பு)எடுத்த திருமேனி
மேலும் கீழும்

எள்இருக்கும் இடம்இன்றி
உயிர்இருக்கும் இடம்நாடி
இழைந்த வாறோ ?

கள்ளிருக்கும் மலர்க்கூந்தல்
சானகியை மனச்சிறையில்
கரந்த காதல்

உள்ளிருக்கும் எனக்கருதி
உடல்புகுந்து தடவியதோ
ஒருவன் வாளி ?

[வெள் எருக்கஞ் சடைமுடியான் — வெண்ணிறமுள்ள எருக்க மலரை அணிந்த சடைமுடியுள்ள சிவபெருமான் வெற்பு — மலை; (இங்கே) கைலாசமலை. எள் இருக்கும் இடம் இன்றி — எள் இருப்பதற்கும் இடம் இல்லாமல். இழைத்த வாறோ — செய்த வகையோ. கள்— தேன். மனச் சிறையில் — மனமாகியசிறையில். கரந்த காதல் — ஒளித்துவைத்துக் கொண்டிருந்த காதல், உள் இருக்கும் எனக் கருதி — உள்ளே எங்கேயாவது பதுங்கியிருக்கும் என்று நினைத்து. ஒருவன் வாளி — ஒப்பற்ற ராமபிரானுடைய அம்பு.]



ராவணனுடைய உடம்பு எங்கும் எள் இடவும் இடமின்றி ராம பாணம் தொளைத்திருப்பதைக் காண்கிறாள் மண்டோதரி. "அசையாத வெள்ளியங்கிரியையும் அசைத்தெடுத்த திருமேனி யல்லவா?" என்று அந்தப் பழைய வச்சிர தேக நினைவும் வருகிறது.

அது அந்த நாளில். இன்றோ அந்த மேனி?

'ராவணனார் உயிர் இருக்கும் இடம் எங்கே? எங்கே?' என்று தேடித் துருவிப் பார்த்திருக்கிறதோ ராமபாணம்?" இப்படி நினைக்கிறாள் மண்டோதரி ஒரு கணம்.

அடுத்த கணமே வேறொரு காரணம் இலக்காகிறது கற்பனைக் கண்ணுக்கு. சீதையை ராவணன் அசோக வனத்தில் சிறை வைத்ததற்கு முன்பே மனச் சிறையில் வைத்து விட்டானாம்.

மயிலுடைச் சாய
லாளை வஞ்சியா
முன்னம் நீண்ட

எயிலுடை இலங்கை
நாதன் இதயமாம்
சிறையில் வைத்தான்

என்பது ஆரணிய காண்டத்தில் கவிக் கூற்று.

இந்தச் சிறையிலிருந்து விடுவிக்கத்தான் ராமபாணம் 'அந்தக் காதல் உள்ளே எங்கேயாவது பதுங்கி யிருக்கிறதோ பார்க்கலாம்' என்று உடல் முழுதும் புகுந்து தடவிப் பார்த்ததோ? — இப்படிப் பெருமூச்சு விடுகிறாள் மண்டோதரி.

விபீஷணன் புலம்பலில் சூர்ப்பணகையின் குணசித்திர வளர்ச்சிக்கும் விபீஷணனின் குணசித்திர வளர்ச்சிக்கும் அவசியமான ஒரு குறிப்பைக் கண்டோம். மண்டோதரி புலம்பலில் இவளது குணமாட்சியைக் காண்பதுடன், காவியக் கட்டுக்கோப்பை அடிக்கடி நினைவூட்டிக் கொண்டு கவிதை போகும் போக்கிலே ஒரு பெருங் குறிப்பையும் காண்கிறோம்.

ராமாயணத்தின் தனிப்பெரு நோக்கு ராவண வதம். இந்தத் துஷ்ட நிக்கிரகம் நாணயத்தின் ஒரு பக்கம் தான்; மறு பக்கம் சிஷ்ட பரிபாலனம்— அதாவது தேவர் முனிவர் முதலான சிஷ்டர் பாதுகாப்பு. பாதுகாப்பிற்காக வதம் நடந்திருக்கிறது.

இரட்டைப் பெரு நோக்கு நிறைவேறும் முறையில் கம்பனது காவியம் நிர்மாணமாகிறது. இந்தக் கட்டிடத்திற்கு இன்றியமையாத போம்சங்கிலைச் சுட்டிக் காட்டுகிறது மண்டோதரியின் புலம்பற் கவி ஒன்று.

ராவண வதத்திற்குச் சீதை சிறை புக வேண்டும்—புறச் சிறையிலும் மனச் சிறையிலும் தான். அதற்கு ஜானகியின்

பேரழகு வேண்டும்: அதனால் விளையும் நாசத்திற்கு ஜானகி கற்பும் ராவணன் காதலும் இன்றியமையாதன.

எனவே, தன் பெருஞ் சோகக் குர லெடுத்துக் கதறும் மண்டோதரி,

காந்தையருக்(கு) அணிஅனைய
சானகியார் பேரழகும்,
அவர்தம் கற்பும்,

ஏந்துபுயத்(து) இராவணனார்
காதலும்......

[காந்தையருக்கு—பெண்பாலாருக்கு.]
என்று தொடங்குகிறாள்.

ஜானகியார் கற்பும் ராவணனார் காத லும் மோதிக் கொள்வதற்கு வனவாசம் தேவை. எனவே,

வேந்தர்பிரான் தயரதனார்
பணிதன்னால் வெங்கானம்
விரதம் பூண்டு

போந்ததுவும்......

[போந்ததுவும் — வந்ததுவும்.]
என்று புலம்புகிறாள்.

இத்தனை அம்சங்களுடன் உருவாகி வரும் கட்டிடத்தை உற்று நோக்குங்கள்.

கல்லையும் மண்ணையும்
பொன்னையும் கொண்டு
காமர் மணிகள்
சிலசில சேர்த்து,

கட்டிடம் அமைத்திருக்கிறார்களல்லவா? அப்படி அமைந்து வருகிறதாம் ராவண வதம் என்ற காவியக்கட்டிடமும்,—சீதை பேரழகு, கற்பு, ராவணன் காதல், பிதுர் வாக்கிய பரிபாலனத்தால் ஏற்பட்ட வனவாசம் முதலான முக்கிய அம்சங் களுடன்.

இந்தக் கட்டிடத்திற்காக வந்து விழும் கல் மண் பொன் மணிகளுக் கிடையே 'சூர்ப்பணகை இழந்த மூக் கும்' காணப்படுகிறது. இதுவும் ஓர் உயிர் நிலைக் கல் இந்தக் கட்டிடத்திற்கு!

இப்போது பாட்டு முழுதும் பாருங் கள்:

காந்தையருக்(கு) அணிஅனைய
சானகியார் பேரழகும்,
அவர்தம் கற்பும்,

ஏந்துபுயத்(து) இராவணனார்
காதலும், அச்சூர்ப்பணகை
இழந்த மூக்கும்

வேந்தர்பிரான் தயரதனார்
பணிதன்னால் வெங்கானம்
விரதம் பூண்டு

போந்ததுவும், கடைமுறையே
புரந்தரனார் பெருந்தவமாய்ப்
போயிற் றம்மா!

[கடை முறையே—முடிவாக: புரந்தர னார்—தேவேந்திரன்.]

ஓதி ஓதி உணர உணரக் காவியக் கட்டுக் கோப்பு அதிசயமாகப் புல னாகும்.

* * *

ராவணனும் தவங்கிடந்து வரமும் வலிமையும் பெற்றவன்தான். ஆனால் அசுரர் அரக்கர்களின் கொடிய தவத் தைக் காட்டிலும் சாதுக்களின் தவமே பெருந் தவமாகும்.

அற நெறியாகிய தவ நெறிக்குத் தான் தெய்வச் செயலாகப் பல நிகழ்ச்சி களும் — அசுர நிகழ்ச்சிகளும் கூட — உதவுகின்றன.

வெற்றிச் செய்தி சீதைக்கு அறிவிக் கப்படுகிறது. அனுமன் போய் அறிவிக் கிறான். 'இங்கு நடந்த செய்திகளை ஜானகியிடம் சென்று தெரிவிப்பாய்' என்பது ராமன் கட்டளை.

பாக்கியமா, பைத்தியமா?

ஏற்கெனவே சீதையைத் தேடித் தூது போய் வெற்றியுடன் வந்தவனே இப்போது முடிவான வெற்றிச் செய் தியையும் தெரிவிக்கப் போகிறான். 'வாட்டமுற்றிருந்த பூங்கொடி மீளத் தழைப்பதற்குத் தண்ணீர் வார்ப்பது போலிருந்தது அனுமன் சொன்ன செய்தி' என்ற பீடிகையுடன் அனுமன் சொன்ன விதம் வருணிக்கப் படுகிறது.

உடனே ராவண வதச் செய்தி யைச் சொல்லி விடவில்லை. மகிழ்ச்சி முதல் முதல் பாட்டா கிறது. ராமநாமங்களைப் பல முறை சொல்லிப் பாடுகிறான்; ஆடுகிறான் நவ வியாகரண பண்டி தனான அனுமன். எனினும் ஆடலும் பாடலும் இலக்க ணப்படி அமைந்து விட்டன என்று சொல்லமுடியாது. ஏதோ ஒரு வகை யில் குதித்துக் கூத்தாடுகிறான் என்றே சொல்ல வேண்டும்.

சீதை முன்னே இருப்பதையும் மறந்து கூத்தாடிய அனுமன் அந்த ஆனந்த தாண்ட வத்தை ஒருவாறு சமாளித்து நின்று கொண்டு தன் கை களைத் தூக்கித்தலை மேல் வைத்துக் கொள்கிறான் சீதை யின் எதிரிலே. 'அந் தக் கைகள் எப்படி நடுங்குகின்றன பாருங்கள்!' என்று காட்டுகிறான் கவி ஞன்.

கடைசியாகச் சோபனம் பாடிக் கொண்டு செய்தி சொல்லுகிறான்:

ஏழை! சோபனம்;
ஏந்திழை! சோபனம்;
வாழி; சோபனம்;
மங்கல சோபனம்.

[ஏந்திழை—பெண்ணே.]

இப்படி மங்களச் செய்தியை அனுமன் வாயிலாகக் கேட்டவுடன் சீதை பூரித் துப் போகிறாள். இக்களிப்பு மிகுதியால் ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் சும்மா இருக்கிறாள்.

இந்த நிலையில் 'இந்தத் தூதன் வார்த் தை பொய்யா யிருக்கக் கூடும் என்று எண்ணுகிறாளோ?' என்று கூட எண்



ணிக் கேட்டு விடுகிறான் அனுமன். சீதையோ,

பாக்கி யப்பெரும்
பித்தும் பயக்குமோ?

[பெரும் பித்து—இப்படிப்பட்ட பெரிய பைத்தியத்தையும். பயக்குமோ—தரவல்லதோ.]

என்று ஒரு கேள்வி—வடிவத்திலே பதில் சொல்லுகிறாள்.

ஏழை ஒருவனுக்கு அதிர்ஷ்டச் சீட்டில் முப்பது லட்ச ரூபாய் கிடைத்து விட்டதாக ஒருவன் வந்து செய்தி சொன்னான். அந்த ஏழைக்குப் பைத்தியமே பிடித்து விட்டதாம். ஆனால் அந்த நிலையைச் சீதை கடந்து போய், அனுமன் செய்த பேருதவியைச் சிந்தித்த வண்ணம் பேசாமலிருந்துவிட்டதாகத் தெரிவிக்கிறாள்.

கடைசியாக 'இனி நான் உனக்குச் செய்ய வேண்டியதுதான்என்ன? நீயே சொல்வாய், தூதனே!' என்று சீதை கேட்க, அனுமன் 'உன்னை அழைத்துக் கொண்டு போய் ராமனுக்கு அளிப்பதே எனக்கு இசைந்த பணியாகும்' என்று பதில் சொல்லுகிறான்.

இப்படிச் சொல்லி விட்டு 'உன்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்த அரக்கியரைக் கொல்லும்படி வரம் தரவேணும்' என்று வேண்டிக் கொள்கிறான் அனுமன். சீதையின் கருணையோ அவர்களுக்கும் அபயம் அளித்து விடுகிறது.

கம்பனும் வியாசமுனியும்

தேவமாதர்கள் சீதையை அலங்கரிக்க வருகிறார்களாம்; அது ராமன்



பணியென்று சீதையும் இசைந்திருக்க, தேவரம்பை சீதைக்குச் சிக்கெடுத்துக் கூந்தலை வாரி விடுகிருள். இந்தச் செயல் கவிஞனுடைய மனோபாவத்தை எப்படிப் பறக்க விடுகிறது பாருங்கள் :

காணியைப் பெண்மைக்
கெல்லாம், கற்பினுக்(கு)
அணியைப், பொற்பின்

ஆணியை, அமிழ்தின்
வந்த அமிழ்தினை,
அறத்தின் தாயைச் —

சேணுயர் மறையை
எல்லாம் முறைசெய்த
செல்வன் என்ன,—

வேணியை அரம்பை
மெல்ல வரன்முறை
வகிர்ந்து விட்டாள்.

[காணி — விளை நிலம். பொற்பின் — அழகின். ஆணி-ஆணிப் பொன் போன்றவள். சேண் உயர் — மிகச் சிறந்த. மறையை எல்லாம் — எல்லா வேதங்களையும். முறை செய்த — ஒழுங்கு படுத்திய. செல்வன்என்ன— வேத வியாசமாமுனி போல. வேணியை — தலைரோமச்சடையை. அ ர ம் பை — ரம்பை யென்னும் தெய்வப் பெண். வரன்முறை — ஒழுங்காக. வகிர்ந்து விட்டாள் — சிக்கெடுத்து வாரி விட்டாள்.]

சீதையின் கூந்தல் சிக்குப்பட்டு ஒரே சடையாகி விட்டது. எவ்வளவு ஜாக்கிரதையாக அந்தத் தலை ரோமத்தை ரம்பை மெல்ல வகிர்ந்து செம்மை செய்திருக்க வேண்டும்! இதற்கு உபமானம் தேடுகிறது கவிஞன் உள்ளம்.

நிலைகுலைந்து கிடந்ததாம் வேதம்: அதைச் சிக்கெடுத்து ஒழுங்கு படுத்தித் தந்த பெருமை வேத வியாசனுக்கே உரியது. அந்தச் செல்வனை நினைவூட்டுகிருள் இந்தச் செல்வி. அவன் வகுத்த தூய வேதம் பிராட்டியின் கூந்தலுக்கு உவமையாகிறது.

வேத வியாசனுக்குக் கம்பனது நன்றி கலந்த பாராட்டுரை இது. வேதத்தின் மீது கவிஞனுக்குள்ள பக்திதான் அந்த வேதத்தைப் பிராட்டியின் கூந்தலுக்கு உவமையாக்கத் தூண்டுகிறது.

கதையின் போக்கு

சீதை கணவனைக் கண்டு தொழுது கவலை ஒழிந்து நிற்கும்போதே, இவளது கற்பின் உறுதியைப் பரிசோதிப்பதற்காக ராமன் பலவாறு கடிந்து பேசுகிருனும். இது ராம குணதிசயத்திற்கு எவ்வாறு பொருந்துமோ என்று பிரமித்துப் போகிறோம்.

இந்த நிகழ்ச்சிக்கு உரிய வித்து நாம் ஏற்கெனவே சுந்தர காண்டத்திலே சீதையின் தனிமை யுரையில் கண்டது தான். 'ராமன் ராட்சஸவதம்செய்து



என்னை மீட்டுக் கொண்ட பின் " நீ என் இல்லத்தில் புகுவதற்குத் தகுதியானவள் இல்லை " என்று சொல்லி விட்டால், 'நான் என் கற்பினை எப்படி மெய்ப்பித்துக் காட்டுவேன்!' என்று அப்போது சீதை தனக்குள் தானே சொல்லிக் கொண்டாள்.

எனினும், இந்த 'மீட்சிப் படல'த்திலே ராமன் சீதையை நடத்தும் விதம் பக்த ரஸிகர்களின் உள்ளத்தையும் புண்படுத்தக்கூடும் என்றே தோன்றுகிறது: சீதை லட்சமணனை நோக்கித் தீ அமைக்கச் சொன்னதும் ராமன் அதை அனுமதிப்பதைத் தான் பாருங்கள்.

சீதை அக்கினியை நோக்கி,
'மனத்தினால், வாக்கினால்
மறுவுற்றேன் எனின்,
சினத்தினாள், சுடுதியால்
தீச்செல்வா!' என்றாள்

[மறுவுற்றேன் எனின்—களங்கம் உடையேன் ஆயின். சுடுதியால் — சுட்டுவிடு. தீச்செல்வா—அக்கினி பகவானே.]

இப்படிச் சொல்லிவிட்டு அக்கினிப் பிரவேசம் செய்யும்போதும் கணவனுக்கு வணக்கம் செலுத்தினாள் என்பது சீதையின் குண சித்திரத்தை மகோன்னத நிலையில் சிறப்பித்துக் காட்டுவது தான். ஆனால் இந்த நிகழ்ச்சி ராம குண சித்திரத்தைப் பாதிக்கவில்லையா ?

செல்வியின் கற்புத் தீயால் தீச்செல்வனும் சுடப்படுகிறான் என்றும், அவன் தவிப்புடன் பிராட்டியை ராமன் அருகில் கொணர்ந்து விடுகிறானென்றும், அப்பால் ராமன் அங்கீகரிக்கிறான் என்றும் கதை சொல்லுகிறது. இந்த நிலையில் ராமனைக் 'கருணை உள்ளத்தான்' என்று கவி கூறுவது நமக்கு ஆறுதல் அளிக்கவில்லை.

கற்பனை மோகம்

மேலுலகத்திலிருந்து தசரத சக்ரவர்த்தியும் பூமிக்கு வந்து ராமனைப் பார்க்கிறானும். ராமன் வணங்கத் தசரதன் காதல் — மைந்தனைத் தழுவிக் கொள்கிறான்.

அப்போது தசரதன் வார்த்தையாக அமைந்திருக்கும் கவிதை பண்டிதர்களிடையே மிகவும் பிரசித்தமானது:

அன்று கேகயன்
மகள்கொண்ட வரம்எனும்
அயில்வேல்
இன்று காறும்என்
இதயத்தி னிடைநின்ற(து);
என்னைக்
கொன்றும் நீங்கல(து);
இப்பொழு(து) அகன்ற(து),
உன் குலப்பூண்
மன்றல் ஆகமாம்
காந்தமா மணிஇன்று
வாங்க!

[அயில் வேல் — கூரிய வேலாயுதம்: இன்று காறும் — இது வரையிலும். குலப்பூண் மன்றல் ஆகம் — சிறந்த ஆபரணங்களை அணிந்ததும், நறுமணம் உடையதுமான மார்பு. ஆகமாம் காந்தமாமணி — மார்பாகிய சிறந்த காந்த மணி.]

* * *

இந்தக் கற்பனையை நினைவில் வைத்துக் கொண்டு சுந்தர காண்டத்திலே அனுமன் சீதையைக் கண்டதாக வரும் பாட்டிலும் ஒரு பாடத்தை ஒரு பெருந் தமிழ்ப் புலவர் ஊகித்துக் கொள்கிறார்:

சீதையின் பிரிவுத் துயரம் ராமன் மார்பிலே வேல் போல் பதிந்திருந்ததாம். அந்த வேலை வாங்கும் காந்தமாகச் சீதையை அனுமன் கண்டு கொண்டானும்.

இதற்குக் கொள்ளப்படும் பாடம் :

உருநிறத்(து) ஒருதனிக்
கொண்டல் ஊழியான்
இருநிறத்(து) உற்றவேற்(கு)
இயைந்த காந்தத்தை.

[உருநிறம் — உருவத்தின் நிறம். கொண்டல் — மேகம். ஊழியான் — நீடுழி வாழ்பவன். இரு நிறத்து—பெரிய மார்பிலே. உற்ற வேற்கு—பொருந்திய வேலுக்கு.]

ஆனால் ஆராய்ச்சிப் பதிப்பிலே உண்மைப் பாடமென்று கொள்ளத் தக்கது:

குருநிறத் தொருதனிக்
கொண்ட லாம்பனத்
திருவுருப் பொலியும்ஓர்
செல்வன் தேவியை.

உண்மைப் பாடத்தை மறந்திருந்த நிலையில் யுத்த காண்டத்துக் கற்பனை மோகம் பூர்த்தி செய்து வைத்த சுந்தர காண்டச் செய்யுட் பகுதியிலும் வேலும் காந்தமும் பிரஸ்தாபிக்கப் படுகின்றன:

முடி சூட்டு வைபவங்கள்

தருமம் வீர முடி சூடியது

பி.ஸ்ரீ

35

அண்ணனை இழந்த துயரம் ஒரு கொடுந் துயரமாய், இதயத்திற்கு ஒரு பெருந் துன்பச் சுமையாய் இருந்தது விபீஷணனுக்கு. இவ்வளவு வருத்தத்தையும் முகத்திலே கண்டு கொண்ட ராமன், தன் அருகில் வந்து நின்ற அந்தத் தம்பியைப் பேரன்புடன் நோக்கி ஆறுதல் கூறினான். அண்ணன் ஒருவன் தானே இப்போது விபீஷணனுக்கு?

அறமும் நீதியும்

சரணம் அடைந்த தம்பிக்குத் தேறுதல் கூறிய பின், தம்பி லட்சுமணனை நோக்கி, 'நீ வானர வீரர்களுடன் இலங்கை நகரத்திற்குள்ளே போய், முறைப்படி நம் தம்பிக்கு முடி சூட்டுவாய்' என்று சொல்லி, லட்சுமணனுக்கும் சுக்கிரீவன் அனுமன் முதலானவர்களுக்கும் விடையளித்தான்.

இப்படி விடையளிக்கும்போது ராமன் 'விபீஷணத் தம்பியை முடி சூட்டுவாய்' என்று சொன்னாலும் திருப்தி பிறவாத மன நிலையுடன்,

நீதியானை
நெடுமுடி சூட்டுவாய்

என்று சொல்லுகிறான்.

தருமத்தைச் சரணமாக அடைகிறவன் தரும சொரூபியாக இருப்பதுடன், நீதி தவறாதவனாக இருக்க வேண்டும் என்பதும் குறிப்பு. ராவணன் சகோதரனாக இருந்தும், அவன்மீது உள்ளத்திலே அபிமானத்திற்கு ஒரு குறைவும் இல்லாமலிருந்தும், 'அறம் நிற்க வேண்டும் என்றால் ராவணன் 'நிர்மூலமாக வேண்டியதுதான்' என்ற துணிச்சலுடன் ராமனுக்கு உதவியதால், விபீஷணன் 'நீதியான்' என்று இங்கே சிறப்பிக்கப் பெறுகின்றான்.


தன் கையால் இந்த நீதியானுக்கு நெடுமுடி சூட்டவும் ஆசைதான் ராமனுக்கு. ஆனால் வனவாசம் செய்ய உடன் பட்டு வந்திருப்பவன் நகரப் பிரவேசம் செய்யக் கூடாதே! எனவே, இந்தப் பணியை லட்சுமணனுக்கு இடுகிறான்.

சுக்கிரீவ பட்டாபிஷேகமும் லட்சுமணனைக் கொண்டு தானே நடைபெற்றது. அப்போதும் கிஷ்கிந்தாபுரிக்குள் பிரவேசிக்கவில்லை. இப்போது லங்காபுரியிலும் பிரவேசிக்கவில்லை.

பட்டாபிஷேக முயற்சிகள்

விபீஷண பட்டாபிஷேகத்திற்கு உரிய முயற்சிகள் நடைபெறுகின்றன. திக்குப் பாலகர்கள் என்ற எட்டுத் திக்குக் காவலர்களும் இயன்ற உதவிகளைச் செய்கிறார்களாம்.





விண்ணவர்களும் இயன்ற உதவிச் செயல்களைச் செய்கிறார்களாம். விண்ணும் மண்ணும் ஒன்றுபட்டு ஒரு நற்பெருங் காரியத்திற்கு உதவி புரியும் என்பது உட் பொருள்

பல கடல்களிலிருந்தும் தீர்த்தம் கொண்டு வருகிறார்கள். கங்கா தீர்த்தம் முதலான புண்ணிய தீர்த்தங்களும் கொண்டுவரப் படுகின்றன. வேறு உபகரணங்களும் விரைவாகச் சேகரிக்கப் படுகின்றன.

வேண்டியது ஒரு கிரீடம் தான்; எனினும் பல கிரீடங்களை உபசாரமாகக் கொண்டு வருகிறார்கள். ராவணன் பத்துத் தலைகளிலும் பத்துக் கிரீடங்கள் அணிந்து ஆட்சி செலுத்தினான் அல்லவா? விபீஷணன் எண்ணிறந்த நெடு முடிகளுடன் நெடுங்காலம் ஆட்சி செலுத்த வேண்டும் என்பது தேவர்களின் ஆசை.

வலிமை மிக்கச் சிங்கம் தாங்குவது போல் உருவம் அமையச் சித்திரிக்கப் பெற்ற விசேஷ சிங்காதனம் ஒன்றும் விபீஷணனுக்காகச் சித்தமாகிறது. தருமம் அமர்ந்து நீதி செலுத்துவதற்கு வலிமையும் வேண்டு மல்லவா?

ராட்சஸ பலமும் வேண்டியதுதான்; ராட்சஸனைப் போல் அதை உபயோகிப்பதுதான் தவறு. விபீஷணனிடம் வலிமையோடு தர்ம சக்தியும் நிரம்பியிருக்கிறது. விபீஷணனைக் கோழையென்றோ, வலிமைக் குறைவு உள்ளவன் என்றோ கருதுவோர், கம்பனை அறியாதவர்களே.

பட்டாபிஷேக மண்டபம் ஒன்றும் அவசர அவசரமாக நிர்மாணமாகிறது. மயன் என்ற அசுரத் தச்சனே இந்த மண்டபத்தைச் செய்கிறானாம். மண்டோதரி தந்தை, ராவணன் மாமன் இவன்.

கல்லும் மண்ணும் பொன்னும் மணியும் கண்ணீரும் கலந்து சமைத்த மண்டபம் இது! கலைக்காதலிலும் அறக்காதலிலும் சோகத்தைக் கரைத்து விட்டுச் செய்து நிறுத்திய மண்டபம்.

இவன் கட்டி நிறுத்திய மண்டபம் அவசரமாகச் செய்யப்பட்டிருந்தும், மிகவும் அழகாக அமைந்து விடுகிறது.

தேசுலாமணி
மண்டபம் செய்தனன்

['தேசுலா மணி மண்டபம்'—தேஜஸ் உலாவுகின்ற அழகிய மண்டபம்] என்பது கவிக்கூற்று.

பட்டாபிஷேகம்

வேத முறைப்படி மகா தீர்த்தங்களைக் கொண்டு விபீஷணன் மீது அபிஷேகம் செய்கிறார்கள். பிறகு லட்சுமணன் முடி சூட்டுகிறான்:

ஐயன் ஆணையி
னால்இளங் கோளரி
கையி னால்மகு
டம்கவித் தானரோ.

தர்மாத்மா சிங்காதனத்தில் வீற்றிருந்த[மாட்சி தருமத்திற்கே வெற்றிதான்;

கரிய குன்று
கதிரினைச் சூடி ஓர்
எரிம ணித்தவி—
சிற்பொலிந் தென்னவே.
விரியும் வெற்றி
இலங்கையர் வேந்தன் நீ(டு)
அரிய ணைப்பொலிந்
தான்,அறம் ஆர்த்தெழ!

[கதிரினைச் சூடி—சூரியனைத் தன் சிகரத்தின் மீது கொண்டு.] எரிமணித் தவிசு—ஒளி விடுகின்ற இரத்தினங்கள் பதித்த ஆசனம். பொலிந்தென்னவே—பொலிந்தாற் போல. இலங்கையர் வேந்தன்—விபீஷணன். நீடு அரியணை—பெரிய சிம்மாசனத்தில். ஆர்த்து எழ—ஆரவாரம் செய்து உத்ஸாகம் அடைய.]

முடி புனைந்த விபீஷணன லட்சுமணனை வணங்கி உபசரித்த பின், ராமன் இருக்குமிடம் வந்து வணங்குகிறான். அச்சமயம் தன்னுடைய ஸ்தானத்தில் தான் நகரத்திற்கு மீண்டு வருமளவும் அரசாட்சியைக் கவனித்துக் கொள்ளும்படி லட்சுமணனிடம் ஒப்பித்து வந்திருக்கிறான்.

சுக்கிரீவனோடும் அங்கதனோடும் வந்து தன்னை வணங்கிய விபீஷணனை ராமன் தழுவிக் கொள்கிறான். 'நீதி முறைமைக்கும், தர்ம வழிக்கும் உரிய நிலையில் நின்று இந்த லங்கா ராஜ்யத்தை நீ அரசாளுவாய்' என்கிறான்.

'தரும சீலனே!' என்று விபீஷணனை வாய் குளிர அழைத்து, வேதம் சொன்ன வாயால் வாழ்த்துகிறான் ராமன்.

இப்படி ராமனால் வாழ்த்தப் பெற்ற விபீஷணன், சிரஞ்சீவியாக இன்றும் லங்கா ராஜ்யத்தை ஆண்டு வருகிறானாம். இது கற்பனை இலங்கைதான்; ஈழம் என்ற இன்றைய இலங்கை அல்ல.

அரக்கர்களையும் திருத்தி ஆட்கொள்ளத் தக்க ராம ராஜ்யத் துணுக்கு இது.

ராம ராஜ்யமும், விபீஷண லங்கையும் மகாத்மா காந்தியின் லட்சிய ராம ராஜ்யம் போன்ற கனவு — லோகமே!

காதலோ கள்ளோ!

பி.ஸ்ரீ

36

மேலுலகத்திலிருந்து வந்த தசரதன் ராமனைத் தழுவிக் கொண்டு, 'அன்று கைகேயி கொண்ட வரம் என்ற வேலாயுதம் என்னைக் கொன்றும் நீங்காமலே யிருந்து, இப்போது உன் மார்பாகிய காந்தமாமணியால் அகன்று விட்டது' என்று உளங்குளிர வாய் குளிரச் சொன்னபின், மறுபடியும் ராமனை நோக்கி, 'உனக்கு நான் தரத் தக்கதொரு வரத்தைக் கேட்பாயாக' என்று சொன்னான்.

அதற்கு ராமன், 'நான் உன்னை மேலுலகத்தில் சென்று கண்டு ஆறுதல் பெறலாம் என்று தான் எண்ணி யிருந்தேன்; இப்பொழுது தரிசிக்கப் பெற்றேனே; இதற்கு மேல் பெறக்கூடிய பேறும் உண்டோ?' என்று பதில் சொன்னான்.

இந்த வார்த்தையால் மேலும் வசீகரிக்கப் பெற்ற சக்கரவர்த்தி, 'ஆயினும் உனக்குத் தக்கதொரு வரத்தை நீ கேட்கத்தான், வேண்டும்' என்று வற்புறுத்தினான்.

அப்பொழுது ராமன் கேட்ட வரமும், அதனால் ராமனுக்குக் கிடைத்திருக்கும் உலகப் பெரும் புகழும் எவ்வளவு வசீகரமாகக் காண்கின்றன, இந்தப் பாட்டோவியத்திலே :

'தீயள் என்று நீ
துறந்தஎன் தெய்வமும்
மகனும்,

தாயும் நம்பியும்
ஆம்வரம் தரு'கெனத்
தாழ்ந்தான் :

வாய்தி றந்தெழுந் (து)
ஆர்த்தன உயிரெலாம்
வழுத்தி !

[ஆர்த்தன — ஆரவாரித்தன. வழுத்தி — துதித்து.]

ராமனைக் காடு செல்லும்படியும், தன் மகனை நாடாளும்படியும் வரம் கொண்டு தனக்கு மரணவஸ்தை விளைவித்த கைகேயி மீது தசரதன் கொண்ட கோபம், 'அரசமரத்தைப் பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்துக்கொண்டது போல், 'நீ என் மனைவியும் அல்லை; உன் மகன் என் மகனும் அல்லன்' என்று இருவரையும் துறக்கச் செய்துவிட்டதல்லவா? அந்தக் கோபம், இறந்து மேலுலகம் சென்ற பின்பும் தசரதனை விட்டு நீங்காம லிருந்ததால், ராமன் வரம் கேட்டதும் தழுவிய கைகளும் தளர்ந்து நழுவி விடுகின்றனவாம்.

கைகேயி விளைத்த துன்பம் நீங்கியும் கோபம் நீங்கவில்லை. துன்பத்தை நீக்கிய காந்தமாமணிக்கும் கோபத்தை நீக்கும் ஆற்றல் இல்லையா ?

73

பரதன் விஷயமாக ராமன் கேட்ட வரத்தை மாத்திரம் கொடுப்பதாகச் சொல்லுகிறான் தசரதன். 'உன் கிரீடத்தைப் பறித்துக் கொண்டு இப்படி உன்னை ஆண்டியாக்கி விட்ட பாவிமேல் நான் கொண்ட கோபம் நிச்சயமாய் நீங்கவில்லை' என்கிறான்.

ராமனோ தான் ஆள ஒப்புக் கொண்டதே பிழை யென்றும், 'என்னை ஈன்ற எம்பிராட்டி (கைகேயி) பிழை செய்யவில்லை !' என்றும் சொல்லித் தசரத கோபத்தைப் போக்கி விடுகிறான்.

'என் தெய்வம்' என்று ராமன் ஏற்கெனவே கைகேயியைக் குறிப்பிட்டதும், 'என்னை ஈன்ற எம்பிராட்டி' என்று மறுபடியும் குறிப்பிடுவதும் கடைசியாக மந்திரம்போல் கோபத்தையும் போக்கி விடுகின்றன. மந்திரத்திற்கு இவ்வளவு சக்தி கொடுப்பதும் ராமன் காதல்தான்.

* * *

புஷ்பக விமானத்தில் ராமன் முதலான யாவரும் ஏறிக் கொண்டு அயோத்



திக்குப் புறப்படுகிருர்கள். வழியில் பரத்வாஜ முனிவரது ஆசிரமத்தில் விமானம் இறங்குகிறது. விருந்தாளிகளை முனிவர் உபசரிக்கிருர். ராமன் முன் கூட்டியே பரதனுக்கு ஆள் அனுப்புகிருன். அடையாளமாகத் தன் மோதிரத்தையும் கொடுத்து அனுமனேயே அனுப்பி வைக்கிருன்.

பரதனே நந்திக்கிராமத்திலே ராமனது பாதுகையைப் பூஜித்த வண்ணம் ராமவிரக தாபத்தால் எலும்பும் உருகும்படி வருந்திக் கொண்டிருந்தான். ராமனுக்குக் காட்டிலே கிடைக்கக்கூடிய காய்கனி கிழங்குகளையே தானும் உண்டு உயிர் வாழ்ந்தான்.

ராமன் வரக்கூடிய தெற்குத் திக்கைப் பார்ப்பதே யன்றி வேறொரு திசையையும் பார்ப்பதில்லை. 'ராமன் வாக்கு ஒருபோதும் பொய்த்ததில்லை; எனவே நிச்சயமாக வருவான்' என்று கண்ணீர் பெருகத் தென் திசையை நோக்கிக் கொண்டிருந்தான்.

இந்த நிலையிலுள்ள பரதனை நோக்கி, 'ராமன் வரவேண்டிய நாள் இன்று தான்' என்று சோதிடர்கள் தெரிவித்தார்கள். அது கேட்ட பரதன் இறக்கத் துணிந்து, அரசைத் தம்பி சத்ருக்னன் வசமாக்கி விடலாமென்று கருதுகிருன்.

பரதன் கட்டளையால் தம்பி வந்து தொழுது நிற்கிருன். தம்பியைப் பரதன் தழுவிக்கொண்டு, 'எனக்கு நீ ஒரு வரம் தரவேணும்' என்று அழுது வேண்டுகிருன். 'குறித்த நாளில் ராமன் வந்தானில்லை; நான் தீயில் விழுந்து உயிர் விடுவேன்; என் சொல்லை மறுக்காமல் நீ அரசு தாங்குவாய்' என்கிருன்.

அண்ணன் பேசுவது போலவா தம்பிக்குத் தோன்றுகிறது? அண்ணன் தனக்கு இரக்கமின்றி நஞ்சை ஊட்டுவது போலவே தோன்றுகிறதாம். அவன் ஊட்டத் தான் உண்டு நடுங்கி விழுவது போலக் கீழே விழுந்து விம்மி விம்மிப் பெருமூச்சு விடுகிருன்.

கடைசியாக எழுந்து நின்று, 'அண்ணு, உனக்கு நான் என்ன பிழை செய்துவிட்டேன், இப்படி என்னை நோக்கிப் பேசுவதற்கு?' என்று கோபிக்கிருன்.

வார்த்தை தெளிவாகப் பரதன் காதில் விழுகிறது:

காளை நிலமகளைக்
கைவிட்டுப் போனனைக்
காத்துப் பின்பு

போனும் ஒருதம்பி;
போனவர்கள் வரும்அவதி
போயிற்(று) என்னு,

ஆனத உயிர்விடஎன்(று)
அமைவானும் ஒருதம்பி:
அயலே நானது

யானும்இவ் அர(சு)ஆள்வென்!
என்னே இவ் அரசாட்சி
இனிதே அம்மா!

[அவதி — கால எல்லை. என்னு — என்று நினைத்து. ஆனத — அமைதியுடன் இராமல் துன்பப்பட்ட.]

சத்ருக்னன் ராமாயணத்தில் பேசியதாக வரும் கட்டம் இதுதான் என்று சொல்லலாம். பேசாமலே பரதனுக்குப் பணி செய்து கொண்டிருந்தவன். ஒரே மௌனமாயிருக்கும் இந்தக் குணதிசயத்திலே இந்த வார்த்தை எவ்வளவு அதிசயமாக இந்தக் கதாபாத்திரத்தைத் தூக்கிக் காட்டுகிறது!

சத்ருக்னன் வார்த்தைக்குப் பரதன் என்ன தான் பதில் சொல்ல முடியும்? 'சரி; தம்பி நீ போய் நெருப்பை மூட்டி வை; நான் ராஜ்யத்தை ஆண்டு


பரதனைத் தீயில் விழ வொட்டாது தடுக்கப் பார்க்கிறாள்.

எண்ணில் கோடி
இராமர்கள் என்னினும்,
அண்ணல்! நின் அரு –
ளுக்கு, அரு காவரோ?

[அண்ணல் – பெருஞ்சிறப்பு வாய்க்கப் பெற்றவனே. ஆவரோ – ஒத்தவராவரோ.]

என்கிறாள்.

'''ஆயிரம் ராமர் உனக்கு ஈடாவரோ?'' என்று பரதனுடைய தியாகத்



கொண்டிருப்பதால்' ராமன் ஒரு வேளை தாமதிக்கிறானோ, என்னவோ? நான் இறந்ததைக் கேள்விப் பட்டாவது உடனே வந்து அவன் ஆட்சி செலுத்தக் கூடும்' என்று சொல்லுகிறான்.

கோசலை ஓடி வந்து அழுது அரற்றிப்

தைப் பாராட்டிய குகனை உரைகல்லாகக் கொண்டு பரதனது தியாக குணாதிசயத்தைப் பத்தரை மாற்றுத் தங்கமாக உரைத்துக் காட்டினான் கவிஞன் அயோத்தியா காண்டத்திலே. அந்தத் தியாகம் இப்போது இந்த அக்கினிப்

பிரவேச காலத்தில் சுடச்சுடச் சுடரும் ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கமாக ஆகி விடுகிறது! இதற்கு ராமன் தாயே இப்போது உரைகல். 'எண்ணில் கோடி ராமரும் பரதனுக்கு ஒத்தவராகார்!' என்றல்லவா சொல்லுகிறாள்?

'நாளை வரையில் காத்திருந்து பார்க்கலாமே' என்ற கோசலையை நோக்கிப் பரதன் சொல்லுகிறான்:

'தாய் சொல் கேட்டலும்,
தந்தை சொல் கேட்டலும்,

பாசத்(து) அன்பினைப்
பற்(று)அற நீக்கலும்,

ஈசற் கேகடன்;
யான்அஃ(து) இழைக்கிலென்;

மாசற்றேன் இது
காட்டுவென் மாண்(டு)'

என்றான்.

[ஈசற்கே — தலைவனை ராமனுக்கே. அஃது இழைக்கிலென் — அந்தக் காரியங்களைச் செய்ய உடன்படமாட்டேன். மாசு அற்றேன் — குற்றம் இல்லாதவனாகி.]

பரதன் நெருப்பை நெருங்கிப் பூஜிக்கிறான், 'விழுந்து உயிர் விடுவதற்குப் பிடிகையாக. கூடியிருக்கும் ஜனங்கள் 'ஐயோ, ஐயோ!' என்று கூக்குரலிடுகிறார்கள். இந்த ஆரவாரங்களுக்கிடையே,

ஐயன் வந்தனன்;
ஆரியன் வந்தனன்

[ஆரியன் — பெரியோனாகிய ராமன்.] என்ற ஒரு குரலும் கேட்கிறது.

அனுமன் கூட்டத்தினுள்ளே புகுந்து விட்டான். குரலைக் கேட்டார்கள்; நெருப்பு எரியாமல் கரியாவதைக் கண்டார்கள்.

கையி னல்எரி
யைக்கரி யாக்கினன்

[எரி — நெருப்பு.]

என்பது கவிக்கூற்று.

பரதன் வளர்த்துப் பூஜித்த பரிசுத்த அக்கினி படும்பாடு இது! பரதன் இப்போது இருக்கும் நிலையில் அனுமனுடைய வார்த்தைகளைக் காட்டிலும் இத்தகைய செயலே அவநம்பிக்கைக்கு ஒருவாறு அருமருந்தாகக் கூடுமல்லவா?

'ராமனுடைய மோதிரத்தைக் கண்டதும் கணையாழி கண்ட சீதையின் மகிழ்ச்சியை அடைகிறான் பரதனும். பக்கத்தில் இருப்பவர்களை நோக்கி, 'பாவிகாள்! தூதன் காலில் விழுங்கள்' என்கிறான். தானும் வணங்குகிறான்.

ஆடுகிறான், பாடுகிறான்:

'வஞ்சனை இயற்றிய
மாயக் கைகையார்

துஞ்சுவர் இனி!' எனத்
தோளைக் கொட்டுமால்!

[கைகையார் — கைகேயியார். துஞ்சுவர் — செத்தே போவார்.]

ஒரு காலை ஊன்றி மற்றொரு காலைத் தூக்கிக் கொண்டு ஆடுகிறானும். இப்படியே இரண்டு கால்களையும் மாற்றி மாற்றி முடக்கிச் சுழன்று ஆடும்போது தோள் கொட்டிப் பாடும் பாட்டு அது!

ராமனுடைய வாயால் 'என் தெய்வம்!' என்றும், 'என்னை ஈன்ற எம்பிராட்டி' என்றும் போற்றிய கவிஞன் தான் இப்போது பரதன் வாயால் இப்படிப் பாடுகிறான்.

இந்த நாடகப் பண்புச் சிகரத்திலே பரதனது மகிழ்ச்சியின் உச்சநிலையையும் காண்கிறோம்:

வேதியர் தமைத்தொழும்;
வேந்தரைத்தொழும்;

தாதியர் தமைத்தொழும்;
தன்னையே தொழும்;

ஏதும்ஒன்(று) உணர்ந்திலன்;
இருக்கும்; நிற்குமால்;

காதல்என்(று) அதுவும்ஓர்
கள்ளில் தோன்றிற்றே!

'ராமன் வந்து விட்டான்; எல்லாம் உங்கள் ஆசிதான்' என்று புரோகிதர்களைத் தொழுதான். பிறகு சிற்றரசர்களைத் தொழுதான் பரத சக்கரவர்த்தி.

நாம் திகைக்கும் போதே, பணிப் பெண்களின் காலில் விழுந்தானும். 'இது என்ன மயக்கம்!' என்று பிரமிக்கும்போதே, பக்கத்திலுள்ள ஒரு கம்பத்தைப் பார்த்து, 'பரதா! நீ பாக்கியசாலி' என்று அப்படியே விழுந்து தொழுகிறானும். என்ன? — குடியன் கூத்தாய்க் காண்கிறதே!

'ஆம்; அந்தக் காதலும் கள்ளில் தோன்றியது தான்!' என்கிறான் கவிஞன்.

கோட்டை மதில்களுக்கு மேலே தோன்றுகிறது புஷ்பக விமானம். எவ்வளவு வேகமாகப் பறந்து வருகிறது! விமானத்திலுள்ளவர்கள் நகரை வணங்குகிறார்கள். ராமன் பிறந்த ஊரல்லவா?

அனுமன் கையைப் பிடித்துக் கொண்டு வருகிறான் பரதன், ராமனை எதிர் கொள்வதற்காக. விமானம் இறங்கி வந்து கொண்டிருக்கிறது. அனுமன் கையை விட்டு விட்டுப் பரதன் ராமனை நோக்கி வணக்கம் செலுத்துகிறான்.

ஐயனை, அவர்கள்
தாமும் அன்புறத்
தழுவித் தக்கம்
செய்யதா மரைக்க
ணீரால் மஞ்சனத்
தொழிலும் செய்தார்

[கைகயன் தனயை — கைகேயி. காலுறப் பணிந்து—காலில் பொருந்த விழுந்து வணங்கி. மொய்குழல் — நெருங்கிய கூந்தல். மொய்குழல் இருவர் —கோசலை சுமித்திரை ஆகிய இருவர். தாளும்—

ராம பட்டாபிஷேகம்

பி. ஸ்ரீ

37

கைகேயியின் கண்ணீர்-அபிஷேகம்

வசிஷ்டன் முதலியோர் விமானத்தை நெருங்கி, அதில் ஏறிக் கொண்டதும் ராமன் முனிவன் அடிகளில் விழுந்து வணங்குகிறான். வணங்கி எழுந்ததும், அருகில் வந்து நிற்கும் தாய்மாரைப் பார்த்து விடுகிறான்.

தன் தாயான கோசலையைப் பார்க்கிறான்; சுமித்திரையைப் பார்க்கிறான். கைகேயி அங்கு வந்து ஒதுங்கி நிற்பதையும் காண்கிறான்.

பளிச்சென்று ராமன், கைகேயி நின்று கொண்டிருக்கும் இடத்திற்குப் போய், முதல் முதல் அவள் பாதங்களில் பணிகின்றான். பிறகு தன் தாயையும், சுமித்திரையையும் முறைப்படி வணங்குகிறான்.

பேச்சு இல்லாமலே உணர்ச்சி செயலில் புறப்படக் காண்கிறோம்:

கைகயன் தனயை
முந்தக் காலுறப்
பணிந்து, மற்றை
மொய்குழல் இருவர்
தாளும் முறைமையின்
வணங்கும் செங்கண்

பாதங்களும். செங்கண் ஐயன் — ராமன். செய்ய தாமரை — செந்தாமரை.]

வாயால் சொல்ல முடியாத உணர்ச்சிக்கு உரிய பாஷை இது தானே! அப்படிக் காலில் விழுந்து வணங்குவதைத் தவிர, ராமனுக்கும் அப்போது வேறொன்றும் சொல்லத் தெரியவில்லையாம்.

கைகேயியும் அன்புறத் தழுவிக் கொண்டு பிள்ளையைக் கண்ணீர் — மஞ்சனம் ஆட்டி வைத்தாள் என்பது தெளிவு. முதல் முதல் கைகேயி தான் இப்படிச் செய்திருக்க வேண்டும், என்ற குறிப்பையும் இப்பாட்டில் காண்கிறோம்.

கைகேயியின் மனமாற்றத்திற்குப் பரிபூர்ணமான சான்றை இங்கே காண்கிறோம். அயோத்தியா காண்டத்திலேயே இம்மன மாற்றம் புலனாகிறது.

பரதன் ராமனைத் திருப்பி அழைத்து வந்து முடி சூட்ட வேண்டுமென்று அந்தத் திசை நோக்கிப் புறப்பட்டதும், மற்றத் தாய்மாருடன் கைகேயியும் போனாள் அல்லவா? பிள்ளை மாமன் வீட்டிலிருந்து திரும்பி வந்ததுமே, கைகேயியின் உள்ளம் அதிர்ச்சி — வைத்தியம் செய்யப் பெற்றுத் திருந்தலாயிற்று என ஊகிக்கலாம்.



ராம—பரதர்களின் சந்திப்பிலும் பாஷையின்றியே அன்புச் செயல் புலனாகிறது. அழுகை, தொழுகை, தழுவுகை தவிர வேறு பாஷையும் உண்டோ இத்தகைய அன்பை வெளியிடுவதற்கு?

பரதன் லட்சுமணனை அழுந்தத் தழுவிக் கொள்கிறான். அது கண்ட அயோத்தி வாசிகள் 'காட்டிலே ராமனுடன் அலைந்து திரிந்து தொண்டாற்றி இளைத்த உடம்பைக் காட்டிலும், நாட்டில் தனித்து வருந்திய உடம்புதான் மிக மெலிந்திருக்கிறது!' என்று வருந்துகிறார்களாம்.

அபிஷேக விழா

அயோத்தி வானர வீரர்களையும் விபீஷணன் முதலியோரையும் வரவேற்று உபசரிக்கிறது. நகர மாந்தரின் மகிழ்ச்சி—வெறி பைத்தியம் போலக் காணப்படுகிறது.

ராமனோடுதான் நந்திக் கிராமத்தை விட்டுப் பரதன் அயோத்தி நகரத்திற்குள் அடியெடுத்து வைக்கிறான். ராமன் கட்டளையால்தான், அரண்மனையில் பிரவேசிக்கிறான்.

இனி ராம பட்டாபிஷேகம் நடைபெற வேண்டியதுதானே. பட்டாபிஷேக நாள் ஏன் இன்னும் அறிவிக்கப்படவில்லை. நாள் பார்க்கும் காரியத்தில், தலையிடாமல் பரதன் வெறுமனே இருப்பதற்குக் காரணம் என்ன? இது சுக்கிரீவன் கவலை.

பரதனை நேரில் கேட்டு விடுகிறான் சுக்கிரீவன். தாமதத்திற்குக் காரணத்தைச்சொல்லு



ருன் பரதன்: 'புண்ணிய திர்த்தங்கள்
யந்து சேர வேண்டுமே; பல பெரிய
திகளி லிருந்து வர வேண்டும்; ஏழு
டல்களி லிருந்நும் வர வேண்டும்' என்
ருன்.

அப்போது சுக்கிரீவன் கடைக்கணிக்க, அனுமன் உடனே புறப்படுகிருன்.

பிறகு வசிஷ்ட முனிவர் வந்து 'பட்-
டாபிஷேக நாள் நாளை' என்கிருர்.
கைகேயியால் தடைப் பட்ட அந்தப்
பட்டாபிஷேக நாளும், நாளை என்று
தான் முனிவர் சொல்லி யிருந்தார்!


அந்த முகூர்த்தத்தில் ராமனுக்கு
முடி, சடை முடியாயிற்று; மரவுரியே
பீதாம்பரமாயிற்று. இந்த முகூர்த்தத்
திலே நிலமாமகளுடனும், திருமாமகளு
டனும் (நிலத்துக்கும் பொருட் செல்வத்
துக்கும் தலைவனுகி) ராமன் இனிதாக
அரசு புரிவான் என்று வசிஷ்டர் உறுதி
கூறுகிருர். இது குறித்த சந்தேகம் தான்
எவருக்காவது இருந்ததா, என்ன?

தூதர்கள் அங்கும் இங்கும் ஓடிச் செய்தி தெரிவிக்கிருர்கள். 'நாளைக்கே பட்டாபிஷேகம்' என்ற செய்தி ராமனுக்கும் அறிவிக்கப்படுகிறது. மகுடாபிஷேக மண்டபம் அமைக்கப்படுகிறது.

இதற்குள் அனுமன் கடல்நீர், புண்ணிய நதிகளின் தீர்த்தங்கள் ஆகியவற்றைக் கொண்டு சேர்க்கிருன். மருத்து மலை கொண்டு வந்தவனுக்கு இதுதானு பெரிது?

76

அந்த ஆபத்துக் காலத்தில் உதவியவன், இந்த மகிழ்ச்சியால் தூண்டப் பெற்று முன்னிலும் விரைவாகப் போய்



காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பி விடுகிறான்.

பளிங்கால் இயன்ற பட்டாபிஷேக மண்டபத்திலே, சிங்காதனம் அமைக்கப் படுகிறது. அதன் மீது ராமன் சீதை யோடு வீற்றிருக்கும் காட்சி:

மாணிக்கப் பலகை
  தைத்து, வயிரத்தின்
  கால்கள் சேர்த்தி
ஆணிப்பொன் சுற்றி
  முற்றி அழகுறச்
  சமைத்த பீடம்
ஏனுற்ற பளிக்கு
  மாடத்(து) இட்டனர்;
  அதனின் மீது
பூனுற்ற திரள்தோள்
  வீரன் திருவொடும்
  பொலிந்தான் மன்னோ!

[தின் கால்கள் — தின்மை அல்லது வலிமை பொருந்திய கால்கள். சுற்றி முற்றி — சுற்றுப்புறம் முற்றுப் பெற்று. சமைத்த — செய்த. ஏனுற்ற—பெருமை பொருந்திய. பூனுற்ற—ஆபரணங்கள் பொருந்திய. திரு — சீதாலட்சுமி.]

மங்கள பதங்கள் பாடுகிறார்கள்; வேத கோஷம் முழங்குகிறது. சங்குகள் முழங்குகின்றன. பலவகை வாத்தியங்கள் முழங்குகின்றன. பூமழை பொழிகிறது. இத்தகைய கோலாகலங்களுக்கு இடையே, ராமனுக்கு அபிஷேகம் நடை பெறுகிறது.

முனிவர்கள், பேரறிவாளர்கள் முதலான பெரியோர்கள் முதலில் நீராட்டுகிறார்கள். பிறகு சுக்கிரீவனும் மற்ற நண்பர்களும், அனுமனும் விபீஷணனும் அபிஷேகம் செய்கிறார்கள்.

அபிஷேக அழகு

சீதையுடன் ராமன் அபிஷேகம் செய்து கொண்டிருந்த அந்த அழகை அப்படியே நாமும் அனுபவிக்கக் கூடும், இந்தக் கவிச் சித்திரத்தின் வாயிலாக:

மரகதச் சயிலம்
  செந்தாமரைமலர்க்
  காடு பூத்து
திரையெறி கங்கை
  வீசும் திவலையால்
  நனைந்து; செய்ய
இருகுழை தொடரும்
  வேற்கண் மயிலொடும்
  இருந்த(து) ஏய்ப்பப்
பெருகிய செல்வி
  கண்டார் பிறப்(பு)எனும்
  பிணிகள் தீர்ந்தார்.

[சயிலம் — மலை. திரை எறி — அலை எறிகின்ற. செய்ய — செம்மையாக. குழை — காதணி. வேற்கண் — வேல் போன்ற கண்கள். இருந்தது ஏய்ப்ப — இருந்ததை ஒப்ப. செவ்வி — என்றும் புதுமையான அழகு.]

அழகனும் அழகியும் தூய நன்னீரால் சொட்டச் சொட்ட நனைந்திருக்கும் அழகின் வசீகரத்தையும் இங்கே காண்கிறோம். கங்கா தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யப் பெற்ற அந்த நீர்த்திவலைகளுடன், சீதாராமர்களின் தரிசனம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தச் சேர்த்தியழகின் பெருக்கைக் காண்பதே போதுமாம், பிறப்பு எனும் பிணிகள் தீர்ந்து, இங்கேயே, இப்போதே விட்டு விடுதலையாகி நிற்பதற்கு.

'அந்த அரண்மனையில் இன்று என்ன விழா? அரசருக்குத் தான் முடி சூட்டு விழாவா? அழைககப் பெற்ற விருந்தினர்கள் பாக்கியசாலிகள் அல்லவா?' என்று கேட்டான் ஒரு யாத்திரிகன்.

'நீயும் பாக்கியசாலி தானப்பா. நீயும் கலந்து கொள்ளலாம் முடிசூட்டு விழாவிலே. அது தான் எங்கள் சடையப்பவள்ளலின் மாளிகை. அங்கே ''அடையா நெடுங்கதவு'' அழைத்த விருந்து, அழையா விருந்து ஆகிய அனைவரையும் வரவேற்கும்!' என்றான் உள்ளூரான்.

நிகழ்காலம் நிழல்போல் ஒதுங்க, சீதையும், ராமனும், சகோதரர்களும், வானரவீரர்களும், வசிஷ்டர் முதலான பெரியோர்களும் பிரத்தியட்சமாகிறார்கள்.

முடிசூடும் நிலையில் ராமன் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கிறான். ராமன் அடிகளில், ராமதூதன் (அனுமன்) அமர்ந்து சிங்காதனத்தைத் தாங்குவது போலக் காணப்படுகிறான்—'இந்தச் சிங்காதனத்தைத் தாங்க வேண்டிய சிங்கம் இந்த அனுமன்தான்!' என்று சொல்லும்படி.

77

மணிமுடி யாருக்கு?



பி.ஸ்ரீ

38

'முடிசூட்டு யாருக்கோ?' என்று யாத்திரிகன் கேட்டதும், 'ராமபிரானுக்கு' என்று வெண்ணெய் நல்லூர்க்காரன் பதில் சொல்லுவதற்குள், 'அனைவருக்கும் தான்' என்று ஒரு குரல் கம்பீரமாக விடையளித்தது.

'அழைப்பு அனைவருக்கும்! முடி சூட்டும் அனைவருக்குமா?' என்று இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த ரஸிகர் கூட்டத்தினிடையே, கவித்வ மாட்சி நிரம்பிய ஒரு திருமுகம் காட்சி வழங்கியது, — நட்சத்திரங்களிடையே சந்திரன் போல.

* * *

கம்பன் பாடுகிறான். பாட்டு என்ற அந்த மந்திர சக்தியால், சடையப்பன் மாளிகை ராமனது அரண்மனையாகிறது. காலட்சேப மண்டபம், பட்டாபிஷேக மண்டபமாகிறது.

வாலிமகன் உடைவாள் பிடித்து நிற்கிறான் — 'இனி எந்தச் சூழ்ச்சியையும் சூழ்வினையையும் வெட்டித்தள்ளி விடுவோம்' என்று துணிந்து விட்டது போல! அனும பக்தியுடன் எப்படிப் போட்டியிடுகிறது இந்த ராஜ பக்தி!

இந்த இரண்டு வானர வீரர்களும் இப்படி ராம கைங்கரியம் புரிய முற்பட்டதும், பரதன் விரைந்து வந்து அரசுரிமைக்கு அறிகுறியான வெண்கொற்றக் குடையை, ராமன் மீது ஆசை தீரப் பிடிக்கிறான். இந்தக் 'குடை'யைத் தானே தாய் தனக்காகத் 'திருடி' வைத்துக் கொண்டாள்?

தம்பியென்று தன்னைச் சொல்லிக் கொள்ளாமல் பணியாளன் என்றே மன மெய் மொழிகளில் பணிபுரிந்து வந்திருக்கும் லட்சுமணத் தம்பி, இப்போது ஒதுங்கி நின்று வெண்சாமரம் வீசுகிறான். ஒரு பணிப்பெண் செய்யக்கூடிய பணிதான்!

ராம கைங்கர்யத்திலே சிறிதென்றும் பெரிதென்றும் உண்டா? பணிபுரிவதில் மேதையான லட்சுமணனுக்குத் தானே தோன்றும் 'இந்தப் பணியாவது கிடைக்கப் பெற்றேனே இந்தச் சமயத்தில்!' என்ற உணர்ச்சி.

லட்சுமணனைப் பார்த்ததும் சத்ருக்னன் என்ற கடைசித் தம்பிக்கும் ஒரு பணி கிடைத்து விட்டது. ஒரு புறத்தில்தானே லட்சுமணன் சாமரை வீச முடியும்?


அதே பணியை எதிர்ப்புறத்திலிருந்து செய்யத் தொடங்குகிறான் சத்ருக்னன். மௌனமாகவே லட்சுமண கைங்கரியத்தை வியந்து போற்றி, அத்தகைய கைங்கரியத்தைப் பரதனுக்குச் செய்து கொண்டிருந்தவன் இவன்.

இனி, வசிஷ்டர் முடிசூட்ட வேண்டியதுதான். இப்படி முக்கியமானவர்கள் பணிபுரியும் இந்த விழாவிலே, சீதை செய்யும் பணி என்ன?

இப்படிப் பணிபுரிவோர் கூட்டத்திலே தனது ஆருயிர் நண்பனை சடையப்பனுக்கும் இடம் தேடிக் கொடுக்கும் கவிஞன் குறிப்பு என்ன?

திருமுடி சூட்டும் இந்தக் கவிச் சித்திரத்தைப் பாருங்கள் :

அரியணை அனுமன்
தாங்க, அங்கதன்
உடைவாள் ஏந்த,
பரதன் வெண்குடை
கவிக்க, இருவரும்
கவரி பற்ற,
விரைசெறி குழலி
ஓங்க, வெண்ணெய்மன்
சடையன் வண்மை
மரபுளோன் கொடுக்க
வாங்கி, வசிட்டனே
புனைந்தான் மௌலி





நறுமணம் கமழும் மலர்களால் கூந்தலை அழகு செய்து கொண்டு, மகிழ்ச்சியால் பூரித்து ஓங்கி நிமிர்ந்திருப்பதே இப்போது இவள் செய்யும் பணி. எல்லாம் சிறை யிருந்த இவள் ஏற்றம் தானே!

இந்தத் திருக் கூட்டத்திலே கலந்து கொண்டு, ராம கைங்கரியம் புரியும் பாக்கியத்தைத் தனது அருமைத் தோழனை சடையன் குலத்திற்கும் அளிக்கத் துடித்தது கவிஞனுள்ளம். சடையப்பனின் முன்னோர்களில் ஒருவன் விழாவில் கலந்துகொண்டு கிரீடத்தைக் கொடுக்கிறானும்.

அந்த மனிதன் சடையப்ப வள்ளலின் முன்னோன்தான் என்பது எப்படித் தெரிகிறது? பார்த்தாலே தெரியவில்லையா? பார்த்தால் பசிபோக்கும் முகமல்லவா? வண்மை மரபின் உண்மை முகம் காட்டுகிறதாம்.

அந்த முகத்திலே சடையப்ப வள்ளலின் முக ஜாடையைக் கண்டு காட்டுகிறது கவிதை. வள்ளற் பெருமக்களின் பிரதிநிதியாக அல்ல, குடியானவர்களின் பிரதிநிதியாகத்தான்! அவன் மணிமுடியைக் கொடுக்கிறான் என்றும் ஊகிக்கலாம்.

சோழ அரசர்கள் தங்களைச் சூரிய குலத்தவரென்றும், ராமனது மரபினர் என்றும் சொல்லிக் கொண்டார்கள். அந்த அரசர்களுக்கு வேளாளர்கள் பட்டாபிஷேக சமயத்தில் கிரீடம் கொணர்ந்து தருவதுண்டு. இந்த வழக்கத்தையும் கருத்திலே கொண்டு சடையப்பன் மரபைச் சிறப்பித்திருக்கிறான் கம்பன் எனக் கருதலாம்.

சரித்திர உலகில் உண்மையல்ல; கவிதையுலகில் ஒரு நிச்சயமான உண்மை தான் இது!

கொடுக்க வாங்கி என்பதும் உண்மை தான். முனி குலப் பெருங் கிழவனாரின் கைக்கும் மேல் குடியானவர்களின் பிரதிநிதி கையைத் தூக்கிக் காட்டும் இந்த நெஞ்சுத் துணிவிலே தான் எவ்வளவு அபூர்வ உண்மை புதைந்து கிடக்கிறது?

இந்தப் பாட்டைக் கவிஞன் பாடிச் சபையை நோக்க, சபை சடையப்ப வள்ளலின் முகத்தையே நோக்குகிறது. வள்ளலின் முகமோ, நாணிக் குனிந்து, 'அந்த வார்த்தைக்கு இதுவா பொருள்?' என்று பிரமிக்கிறது.

* * *

திருவழுந்தூரில் கம்பன் வீட்டிலே ஒரு திருமணம். விருந்தினர்கள் பந்தலை நிறைத்து விடுகிறார்கள். கவிஞனும் மனைவியும் வரவேற்கிறார்கள்.

சடையப்பன் வந்து சேரக் கொஞ்சம் தாமசமாகி விட்டது. வள்ளல் வந்ததையும், பந்தலின் ஓரத்தில் வெறுந்தரையில் உட்கார்ந்து கொண்டதையும் கம்பன் கவனிக்க வில்லை. ஆனால் மனைவி பார்த்து விடுகிறாள்.

'அண்ணாவை அங்கேயா வைக்கிறது?' என்று வருந்துகிறாள். கவிஞனோ ஒரு குறும்புப் புன்னகையுடன் 'வைக்கும் இடம் தெரிந்து வைப்போம்' என்று பதில் சொல்லுகிறான், சடையப்பன் காதில் விழும்படி. 'ஏதோ விளையாட்டுப் பேச்சு' என்று தான் வள்ளலும் சிரிக்கிறான்.

* * *

வசிஷ்டர் ராமன் தலையிலே சக்கரவர்த்திப் பதவியின் அறிகுறியான மணி மகுடத்தைத் தூக்கி வைத்தாரோ இல்லையோ? — அந்த மண்டபத்திலுள்ளவர் ஒவ்வொருவரும், 'முனி குலக் கிழவர் மறந்து போய் என் தலையில் வைத்து விட்டார் கிரீடத்தை!' என்றே தலையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டனராம்.

தந்தம்உச் சியின்மேல்
வைத்த(து) ஒத்த(து), அத்
தாம மௌலி.

[தாம மௌலி—ஒளியுள்ள கிரீடம்.]

இந்த உண்மையைத்தான் நமது தேசிய மகாகவி, 'நாம் எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்ற மகாவாக்கியத்தில் வெளியிடுகிறார்.

பாலகாண்டத்தின் முகப்பிலேயே, 'கோன் நிகர் குடிகள்' — அதாவது சக்கரவர்த்திக்கு நிகராயிருக்கும் குடிகள்—என்று குறிப்பிடுகிறான். இடையே இக் கருத்தின் வளர்ச்சியைக் காண்கிறோம். ராமனுக்கு முடிசூட்டப் போகிறார்கள் என்று தெரிந்ததும், தலங்கள் யாவையும் தானே பெற்றதாக மகிழ்ந்து போனானும் சுமந்திரன். சிற்றரசர்களும் தமக்கே அந்தப் பேரரசு கிடைத்து விட்டதுபோல் மகிழ்ச்சி அடைந்தார்களாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பொது மக்களின் குதூகலத்தையும் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறான் கவி:

'பூவலயம் இன்றுபொது;
அன்றுதனி' என்பார்.

இப்படி யெல்லாம் தழைத்துத் தளிர்த்துக் கனியும் கொள்கைதான், ராமனது மணிமுடி அனைவர்க்கும் பொது என்ற சமதர்மப் பெருங் கொள்கை.



மேகமும் மின்னலும்

பி. ஸ்ரீ

39

அது ஒரு காலம்—ராமன் காட்டிலும் பரதன நாட்டிலுமாக இருந்த காலம். ராமன் இல்லாத அயோத்தியில் இருப்பதில்லையென்று நந்திக் கிராமத்தில் வசித்து வந்த பரதன் நாயகக் கோயிலான அரண்மனையை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டிய செலவுகளையெல்லாம் தாராளமாக அனுமதித்தான் என்று கருதலாம்.

ஆனல், 'சொனு மண்டபத்தைப் பழுது பார்க்க வேணுமே' என்றால் அதைக் காதில் வாங்குவதேயில்லை. 'அந்தச் சபா மண்டபம் இடிந்து பாழாகி வந்தது' என்பதைக் கேட்பதிலேயே ஒரு திருப்தி! பரதன் ஆட்சிக்கு ஒரு கொலு மண்டபமும் வேண்டுமா?—என்பது மனநிலை.

அந்தக் காலம் போய் விட்டது; பழங் கதையாய், பயங்கரமான கனவாய் எப்படியோ மெல்லப் போய் விட்டது. இனி அந்தப் பாழடைந்த மண்டபம் ராமன் கொலு மண்டபமல்லவா? எனவே, அதுமாறிப் பிறக்க வேண்டும் என்பது பரதன் சங்கற்பம்.

பொன்னும் மணியும்இழைத்து அழகழகான தூண்களுடன் அமைத்த அது ஒரு புதுமைக் கலைச் செல்வமாகிறது—பூமகளுக்கு இது ஒரு புதிய ஆபரணம் என்று சொல்லும்படி:

'பூமகட்(கு)
அணிஇ(து)!'
என்னப் பொலி,
பசும்
பூரி சேர்த்தி,
மாமணித்
தூணிற்
செய்த் மண்டபம்.

[பூமகள்—பூமி தேவி. பொலி—விளங்குகின்ற. பசும்பூரி—பசும் பொன்; மாற்றுயர்ந்த செம்பொன். சேர்த்தி—சேரப் பெற்று. மாமணித் தூணிற் செய்த—சிறந்த மணிகள் பதிக்கப் பெற்ற தூண்களுடைய.]

திருமலை நாயகர் மஹாலைப் பார்த்தவர்களுக்கு அந்த அழகான தூண்களே சிறப்பாக நினைவிற்கு வரும். பழைய வீரர்களுக்குத் தோளழகு போல் பழைய கட்டடங்களுக்குத் தூணழகு? தூணழகைக் காட்டிக் கட்டடத்தின் அழகை நமது ஊகத்திற்கு விட்டுவிடுகிறது பாட்டு.

இக்கட்டடம் ஒரு கலா சிருஷ்டி. இதைப் 'பூமகட்கு அணி' என்று குறிப்பிடும் கவிஞன் வாக்கிலே 'இவனது கலைக் கொள்கை இது' என்பதையும் உய்த்துணரலாம்.

கலையே இயற்கை பன்னைக்கு அணியாகும் என்பது இக் கொள்கை. கம்பன் காவியம் முழுவதும் இதற்குச் சான்று;

கலாசிருஷ்டி பூர்ணமாகிக் கனிந்து ஓர் இயற்கைப் பொருள் போலப் பரிணமித்து விடுகிறது, கம்பனது மேதையின் ஸ்பரிசத்தால்.

* * *



சொல்லை இசைத்துக் கவிதை செய்வது போல் பொன்னோடு இரத்தினங்களை இசைத்துப் பழைய கொலு மண்டபத்தை ஒரு புத்தம் புதிய கலா சிருஷ்டியாகச் செய்து விடுகிறார்கள் சிற்ப மேதைகள், பரதன் ஆணைக்கு இணங்க. இந்த மண்டபத்திற்கு வந்து சபையோர் சூழச் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆட்சி செலுத்துகிறான் ராமன்.

முடி சூடி இரண்டு மாதங்கள் ஆகி விட்டன. இவ்வளவு காலமும் பட்டாபிஷேகம் பார்க்க வந்த அரசர்களும், விபீஷணன் சுக்கிரீவன் குகன் முதலான துணைவர்களும் விருந்தினரா யிருந்தார்கள். விடை கொடுத்து இவர்களை அனுப்பி வைக்க ஒரு நாள் ராமன் அத்தாணி மண்டபம் என்ற கொலு மண்டபத்திற்கு வருகிறான்.


பல்லக்கில் சீதையுடன் வருகிறான் என்பதுதான் இந்த 'மண்டப'ப் பாட்டிலே சொல்லும் செய்தி. சொல்லும் கலைத் திறன் அந்த நிகழ்ச்சியை என்றும் வாடாத அழகு நிகழ்ச்சியாக நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது:

'பூமகட்(கு) அணி இ(து)!'
என்னப் பொலிபசும்
பூரி சேர்த்தி,

மாமணித் தூணிற்
செய்த மண்டபம்
அதனின் நாப்பண்,

கோமணிச் சிவிகை
மீதே கொண்டலும்
மின்னும் போலத்

தாமரைக் கிழத்தி
யோடும் தயரத
ராமன்சார்ந்தான்.



[நாப்பண் — நடுவில்; மாமணி, கோமணி — சிறந்த இரத்தினங்கள்; சிவிகை — பல்லக்கு; கொண்டலும் — மேகமும்; மின்னும் — மின்னலும்; தாமரைக் கிழத்தி — தாமரைப் பூவிலிருக்கும் லட்சுமி; (இங்கே) சீதாலட்சுமி.]

தூண்களை அழகு செய்யும் இரத்தினங்களை 'மாமணி' என்று குறிப்பிட்ட கவிஞன் பல்லக்கை அணி செய்யும் இரத்தினங்களைக் 'கோமணி' என்று மதிப்பிடுவது கவனிக்கத் தக்கது. இரத்தினங்களுக்கு ராஜா (பேரரசு) 'கோமணி'.

தசரத ராமன் என்று ராமனைக் குறிப்பிடுவது கூர்ந்து நோக்கத் தக்கது. தசரதன் வீற்றிருந்தகொலு மண்டபம் பரதன் காலத்தில் தீண்டுவாரின்றி அழிந்து போக ராமனுக்காகப் புதுப்பிக்கப் பெற்ற குறிப்பையும் இங்கே காணலாம்.

தசரதன் ஆட்சிக்கும் ராமன் ஆட்சிக்கும் இடையே பரதன் ஒருவன் குறுக்கிட்டு ஆண்ட அறிகுறி ஒன்றும் இருக்கக் கூடாது என்ற பரதன் மனப்பான்மையைத் 'தயரத ராமன்' என்று கூறும் இந்தக் கவிக் கூற்றிலே காணலாம்.

ஓதி ஓதி உணர உணர ஆனந்தக்கனவு பல காட்டும் கவிதை இது.

கொலு மண்டபத்தின் நடுவிலே வந்து சேரும் பல்லக்கையும் அதில் மேகமும் மின்னலும் போலக் காணும் ராமனையும் சீதையையும் இக் கவிதைக் கண்ணாடி வாயிலாக, வேண்டும் போதெல்லாம் தரிசித்துக் கொள்ளும் பேறு பெறுகின்றோம்.

இக் கொலு மண்டபத்திலே சிங்காசனத்தில் ராமன் காட்சி தருவதையும் பாருங்கள்:

கருமுகிற்(கு) அரசு
செந்தா மரைமலர்க்
காடு பூத்(து),ஓர்

அரியணைப் பொலிந்த
தென்ன, இருந்தனன்
அயோத்தி வந்தான்.

[கரு முகிற்கு அரசு — கரிய மேகத்தின் அரசு; மலர்க் காடு — மலர்த் தொகுதி. அரியணை — சிங்காசனம்.]

மின்னலும் மேகமும் போலச் சீதா ராமன் தோன்றித் திகழ்ந்து தியாக வாழ்க்கை வாழ்ந்து மறைந்த கதை



கம்பனது ராமாவதாரம். 'மேகமும் மின்னலும்' என்ற உவமக் கருத்து இக் காவிய மெங்கும் ஒரு பொற்சரடு போல் ஊடுருவிக் கிடக்கக் காண்கிறோம்.

* * *

திருமால் ராமனாக அவதரிப்பதற்கு முன்பே மேகமும் மின்னலுமாகத் தான் காட்சி வழங்குகிறான் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும். பாற்கடலிலே பள்ளி கொண்டிருக்கும் போதும் பகவான் மேகமாகவே குறிக்கப்படுகிறான்;

அலைகடல் நடுவண்ஓர்
அனந்தன் மீமிசை
மலையென விழிதுயில்
வளரும் மாமுகில்.

[நடுவண் — நடுவில். அனந்தன் மீமிசை — ஆதிசேஷன் மேல். மாமுகில்— சிறந்த மேகம்.]

இந்த மேகத்திலே திருமகள் மின்னல் என்பது குறிப்பு.

* * *

ஒரே கடுங்கோடை. மழை முகம் காணாது தவிக்கின்றன பயிர் பச்சைக ளெல்லாம். காய்ந்த தாமிரத் தகடு போல் காண்கிறது வானம். அந்தப் பாழான வஞ்ச வெளியிலே மேகக் கருமையின் குறி ஏதாவது தோன்றுமா?— என்று தேடித் தவிக்கின்றன கண்கள்.

திடீரென்று கருமை தோன்றுகிறது. ஆம், கருமேகம் தான்—மேகமும் மின்னலும். குடியானவர்களின் நெஞ்சம் எப்படிக் குளிர்ந்து குதூகலம் அடையும்!

அப்படிக் குதூகலம் அடைகிறது தேவர்களின் நெஞ்சம் பகவானையும் லட்சுமியையும் கண்டதும்:

கருமுகில் தாமரைக்
காடு பூத்து, நீ(டு)
இருசுடர் இருபுறத்(து)
ஏந்தி ஏ(டு)அவிழ்
திருவொடும் பொலிய, ஓர்
செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல்
வந்து தோன்றினான்.

[இருசுடர் — (இங்கே) சங்கு சக்கரங்கள். ஏடு அவிழ் திருவொடும் — தளை அவிழ்ந்து மலரும் செந்தாமரைப் பூவில் தோன்றும் மகாலட்சுமியோடும்; கலுழன் — கருடன்.]

அவதாரம் செய்வதற்கு முந்திய சௌந்தரிய நிலை இது. ராமாவதாரமாகி அரக்கர் நோய்க்கும் அருமருந்தாகித் தியாக சிகர ஜோதியாக முடிசூடிக் கொள்ளும் நிலையில் சௌந்தரியம் முன்னிலும் பெருகிக் காண்கிறதாம்.

இந்த நிலையைக் குறிப்பதுதான்,

மரகதச் சயிலம்
செந்தா மரைமலர்க்
காடு பூத்து

என்று தொடங்கும் பாட்டு.

கருமேகம் மரகத மலையாகிறது. அந்தத் தாமரைக் காடுதான் இங்கே 'செந்தாமரை மலர்க் காடா'கப் பூத்துப் பொலிகின்றது.

அங்கே சங்கு சக்கரங்களால் அழகு. இங்கே அபிஷேகம் செய்துகொண்ட நிலையில் கங்கா தீர்த்தத் திவலைகளால் நனைந்திருக்கும் குளிர்ந்த அழகு.

அந்த லட்சுமி சீதாலட்சுமியாகி இங்கே,

இருகுழை தொடரும்
வேல்—கண் மயில்

ஆகிறாள்.

அந்தச் சேர்த்தி யழகைக் காட்டிலும் இந்தச் சேர்த்தியழகைப் 'பெருகிய அழகு' என்று சுட்டிக் காட்டுகிறான் கவிஞன்.

அவதார மூர்த்தியின் அழகு அவதாரம் செய்த பரம்பொருளின் அழகையும் வென்று விடுகிறது என்பது கருத்து.



அவதாரம் தானே மானுடத்தின் வெற்றி காட்டுகிறது நம் கவிஞனுக்கு.

* * *

மேகமும் மின்னலுமாகத் தோன்றி அவதாரம் செய்வோம் என்று பகவான் கூறியதே மகத்தான தியாகங்கள் புரிவதற்கு ஒரு முற்குறி.

முதல் முதல் ராம பட்டாபிஷேகம் என்று கேட்டதுமே 'கார் மழை பொழியவும்... மறுக்கின்றார்கள் யார்?' என்பது அயோத்திவாசிகளின் மனநிலை. கூனிபோல் கோணல் உள்ளம் படைத்தவர் தவிர நாட்டு மக்களெல்லாம் "மழை"யை வரவேற்றனர்.

ஆனால் பொழிய வந்த மேகம் நாட்டை ஏமாற்றிவிட்டுக் காட்டிலே போய்ப் பொழிந்தது! முனிவர் துன்பம் தீர, அரக்கர் துன்பமும் தீரக் கருணை பொழிந்தது! இதற்காகவே,

> மேகம் நனி வருகின்றது
> மின்னோ(டு)என—

காட்டுக்கு ராமன் சீதையுடன் வந்து சேர்ந்தான் என்பது கவிஞன் வாக்கு.

மேகம் மின்னலோடு வந்து 'தான் அறப் பெய்து' கருணை வெள்ளத்தால் உலகத்தை வாழ்வித்து மானுடத்தை வெற்றி பெற வளர்த்துவிட்ட கதைதான் கம்பனது ராமகதை. தியாக சிகரத்திலே 'குன்றுடு கொழுமுகில்' போல் காணப்படுகிறான் கம்பனது காவிய நாயகன்.

இந்தக் 'கம்பன் கதை'யின் கடைசி வார்த்தை 'வள்ளல்' என்பது:

> அம்பரந்(து) அனந்தர்
> நீங்கி அயோத்தியில்
> வந்த வள்ளல்.

[அம்பரத்து — (இங்கே) பரமாகாசம் என்ற ஞான வெளியைக் குறிக்கும் பாற்கடலில். அனந்தர் — அறிதுயில்; யோக நித்திரை.]

ஞான ஆகாசத்தில் துயிலும் மேகம் தான் ராமன் என்ற வள்ளலாக அயோத்தியில் வந்து இறங்கியது என்ற செய்தியைத் தெரிவிப்பதுடன் கம்ப ராமாயணம் முற்றுப் பெறுகின்றது.

'மெய்ப் பொருளுக்கு மேலான பொருள் இல்லை' என்பது வேதவாக்கு. அந்த மெய்ப்பொருளே ராமனாகி வந்தது என்பது கம்பன் கொள்கை.

> மேலொரு பொருளும்
> இல்லா மெய்ப்பொருள்
> வில்லும் தாங்கிக்
> கால்தரை தோய நின்று,

கண்ணுக்கு இலக்காயிற்று என்பது கம்பன் காட்டும் ராமன்.

மெய்ப் பொருளின் இதயத்தில் ஒளிரும் கருணையே அழகு. இந்த மெய்ப் பொருளை மேகம் என்றும், கருணையாகிய திருவை மின்னல் என்றும் காட்டுகிறது கம்பன் கவிதை.

* * *

தத்துவஞானிகள் சத்தியமே தெய்வம் என்பர். 'ஒன்றே மெய்ப் பொருள்; அறிஞர் பலவாகக் கூறுகின்றனர்' என்பது வேத ரிஷிகள் கொள்கை. இந்த மெய்ப் பொருளைப் பற்றிய தியான சிந்தனைகளை வேதாந்தமாகிய உபநிஷத்தில் காண்கிறோம்.

வேதாந்த தத்துவம் தமிழைத் தொட்டதும் கலையாகின்றது. வட இந்தியா சிந்தனைக்குப் பேர் போனது என்றால் பாரத அன்னையின் தென்னகம் சிந்தனையைக் கலையாக்கிப் பலருக்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இது நம்மாழ்வாரை உள்ளிட்ட தமிழ்த் திருத் தொண்டர்கள் செய்த அற்புதம் என்பர்.

அந்தப் பரம்பரையில் தோன்றிய கம்பன் சத்தியத்தை ராமன் என்ற அழகனாகக் காட்டுகிறான். மெய்ப் பொருளின் இதயத்தில் ஒளிரும் அருளழகைச் சீதையாகப் பிரத்தியட்சமாக்குகிறான்.

மேகமும் மின்னலும் போல் வந்து காணும் உண்மையும் அருளும் தியாக மூர்த்திகளான சீதாராமராகக் கம்பனது காவியக் கோயிலில் என்றும் பிரத்தியட்சமாயிருக்கின்றனர்.

சுபம்

